# செந்தமிழ்

| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு உ௲க பங்குனி | பகுதி |
|---|---|---|
| ௬௫ | மார்ச்—1970 | ந |


**14—1—70-இல் தமிழ்ச் சங்கச் சார்பில், திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் நிகழ்த்திய**

## திருக்குறட் கொடியேற்றச் சொற்பொழிவு


**தி. மூ. நாராயணசாமி பிள்ளை,** M. A., B. L., திருச்சி.


தனிப் பெருமை வாய்ந்த தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவின் கீழ் நடக்கும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுவிழாவில், திருக்குறட் கொடியை ஏற்றி வைக்கும் பேற்றை எனக்கு அளித்ததற்காகத் தலைவர் அவர்களுக்கும், குழுவினர்க்கும் என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதைச் செய்வதில் எனக்குக் கொஞ்சம் பயம் ஏற்படுகிறது; ஏனெனில், அதற்கு வேண்டிய தகுதி எனக்கு இல்லை என்று நான் உணர்கின்றேன். ஆனாலும் நம் தலைவர் இட்ட கட்டளையைச் சிரமேல் ஏற்றுப் பணிசெய்வது எனது கடமை.

இந்தக் கொடியைச் சற்று முன் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுவித்தேன். அந்தச் சமயம் என் நெஞ்சு புளகாங்கிதம் அடைந்தது; நாம் எல்லோரும் புளகாங்கிதம் அடைய வேண்டியது இயற்கைதானே.

இந்தக் கொடியில் உலகப் படம் எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் 'திருக்குறள் உலகப் பொதுமறை' என்று எழுதப்பட்டிருக்கிறது. இவை மிகப் பொருத்தமானவை; அதாவது, உலகத்தினுடைய நூல் திருக்குறள்; அது ஒரு நாட்டிற்கும், மொழிக்கும், காலத்திற்கும் மட்டும் சொந்தமன்று. உலக மக்கள் எல்லோரும் எப்பொழுதும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூல். ஆகவே திருக்குறள் எல்லோருக்கும் பொதுவான மறை; உலக மக்கள் எல்லோராலும் அவசியம் கற்றுணர்ந்து அதன்படி நடக்க வேண்டிய வேதமாக விளங்குகின்றது.

சாதி, மதம், இனம், மொழி வேறுபாடு இன்றி மக்கட் குலம் முழுவதற்கும் வாழ்க்கையில் வாழ்வதற்குப் பெருந்துணையான நூல். எல்லோரும் சீரும் சிறப்புடனும் போற்றும் அறிவுக் களஞ்சியம். அறத்தின் சிகரம். மூல நூல் தமிழ்மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. எழுதியவர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இவருடைய குறளினால் தமிழ்நாட்டிற்குப் பெரும் புகழ் கிடைத்திருக்கின்றது.

திருக்குறளின் சிறந்த பொதுத் தன்மையை அறிந்து பல அறிஞர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் அதை மொழிபெயர்த்து இருக்கிறார்கள். முதன்முதலில் (Fr. Beschi) மறைத் திரு. வீரமா முனிவர் அவர்கள் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்கள். இன்னும் அநேக மொழிகளில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் ருசியா, செக்கோ (Czecko) மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப், போற்றப்பட்டு வருகிறது. 1968-ஆம் வருடத்தில் சென்னையில் உலகத் தமிழ் மகாநாடு நடந்தது; அப்பொழுது உலக மேதைகள் கூடினார்கள். அந்த மேதைகள் குறளின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தார்கள்; உலக நூலாக மதிக்கப்பட்டது என்பது நன்றாக வெளிப்படையாகத் தெரிந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு அற்புதமான பேருரை செய்தார்கள். அந்த உரை உலக மேதைகளைக் கவர்ந்தது. தமிழ் உலக மொழியாக விளங்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருடைய மனத்திலும் தீவிரமாக உருவெடுத்தது. குறள் உலகப் பொதுமறையாக எப்பொழுதும் விளங்கும் என்பதில் சந்தேகமே இல்லை. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று தேசிய கவி பாரதியார் உணர்ச்சி ததும்பப் பாடியிருக்கிறார். "உலகினுக்கே" என்று சிறப்பித்தது குறிப்பிடத் தக்கது. உலகின் பொது மறையாகக் குறள் விளங்கும் தன்மையைச் சுட்டிக்காட்டி யிருக்கின்றார்.

திருக்குறள் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகின்றது. கடவுள் நம்பிக்கையும் கடவுளை வணங்குவதும் மனிதவாழ்க்கைக்கு அடிப் படையானவை என்று அழுத்தந்திருத்தமாக வள்ளுவர் சொல்லியிருக் கின்றார். கடவுள்தான் ஆதி; அவர்தான் உலகத்திற்கு முதல்வர்; அவர்தான் வாலறிவன்; அவர் பாதமலர்களை வணங்குவதுதான் நமது முதற் கடமை என்று வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். வாலறிவன் தாளை வணங்கா விட்டால் கற்றதனாலான பயன் என்னவென்று கேட்கிறார்? அந்த வாலறிவனாக இருக்கும் இறைவனுக்குச் சிவனென்றோ, விட்டுணு வென்றோ, முருகன் என்றோ, திரிதங்கர் என்றோ, புத்தர் என்றோ அவர் பெயர் சூட்டவில்லை. அவர் உலகில் வழங்கும் எல்லாச் சமயத்தையும் கடந்தவர். ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற பொதுக்கொள் கையைத் திருவள்ளுவர் வற்புறுத்தியிருக்கிறார். திருவள்ளுவர் குறிக்கும் கடவுளை எல்லா மதத்தினரும் ஒத்துக்கொள்ள வேண்டும்; கடவுளின் பொதுத்தன்மை அவர்காட்டும் கடவுளில் மிளிர்கின்றது. வள்ளுவர் கொள்கையில் சாதிமத சச்சரவுக்கு இடமில்லை. மதப் பூசல்களி லிருந்து மக்களைக் காப்பாற்றுகிறார். வள்ளுவர் காட்டும் சமயம் உல குக்கே பொதுச் சமயம். (Universal Religion). சரித்திரத்தைப் பார்த் தால் சமயத்தின்பேரால் எவ்வளவு சச்சரவுகளும் சண்டைகளும் மக்கள் வாழ்வைச் சீர்குலைத்திருக்கின்றன என்று அறியலாம். பேதா பேதமில்லாமல் ஒரே கவுடள்தான் பிரகாசிக்கிறார்; அவர்தான் இயங் குகின்றார். நம்மை இயக்கி வருகின்றார். அவர்தான் வாழ்வை நடத்தப் பெருந்துணை; அவர்தான் நம் கவலையை மாற்ற முடியும்; அவர்தான் எண்குணங்களாலும் விளங்குபவர்; அவரை வணங்காத் தலை, தலை யன்று என்று கம்பீரத் தொனியுடன் எடுத்துரைக்கின்றார். உலகம் நன்றாக வாழவேண்டுமானால் ஒருமைப்பட வேண்டும். இந்த எதிர் காலச் சிறப்பிற்கு அவர் சமயக்கொள்கை (Universal Religion) அடிப் ப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. எதிர்கால உலக ஒருமைப் பாட்டை இந்தக் கொள்கை நன்றாக வளர்க்கும்.

தனிமனிதனின் சிறந்த வாழ்விற்கும் சமுதாயம் சீருடனும் சிறப் புடனும் வாழ்வதற்கும் வேண்டிய சிந்தனைகளை ஆங்காங்கே ஒவ்வோர் அதிகாரத்திலும் திருவள்ளுவர் நமக்குத் தந்திருக்கிறார். மனிதச் சிறப் பிற்கும் வளர்ச்சிக்கும் ஆணித்தரமான சிந்தனைகள் அவை. "பிறப்பொக் கும்எல்லா உயிர்க்கும்" "அன்பின் வழியது உயர்நிலை" இவ்விரண்டும் திருக்குறளின் மூல மந்திரங்கள் என்று சொல்லலாம். பிறப்பினால் ஒரு மனிதனுக்குப் பெருமை கிடையாது. அவரவர் செய்கையின் சிறப் பால்தான் அவரவருக்குச் சிறப்பு. அன்புடையர் எல்லார்க்கும் உடையு

வர்; அன்பில்லாதவர் உடம்பு, தோலால் போர்த்தப்பட்ட எலும்புக் கூடு. அறிவிற்கு, மேலான இடம் திருவள்ளுவர் கொடுக்கிறார். ஆனால் அந்த அறிவு அன்பின் வழிதான் நடக்கவேண்டுமென்று சிறந்த முறையில் வழிகாட்டியிருக்கின்றார். அறிவு, அன்பை வளர்க்கும் அடிப்படையில்தான் அமைய வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. அவர் குறிக்கும் அறிவு என்பது சென்றவிடமெல்லாம் மனத்தைச் செலுத்தக் கூடாது. தீயதைச்செய்வதற்கு அது இடம் கொடுக்கக்கூடாது. நன்மையையேசெய்ய வழிகாட்டுவதுதான் அறிவு என்று வற்புறுத்துகின்றார்.

" அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை "

இது ஒரு மேன்மையான சிந்தனையை நமக்குக் கொடுக்கின்றது "தீமை செய்தவர்க்கும் மறுதலையாகத் தீமை செய்யாமையே அறிவில் எல்லாம் தலையாய அறிவு" என்ற அரும் கருத்தை வள்ளுவர் நமக்குத் தருகின்றார்.

" அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்"

மற்றும் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே பண்பாடு என்ற மிக உன்னதமான கருத்தை இந்தக் குறளில் காண்போம்:—

" இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

அன்பர்களே ! அன்பு வழிதான் சிறந்தவழி; அன்பு எதையும் வெல்லும்; எல்லா அறத்திற்கும் அடிப்படை; எல்லா அறத்திற்கும் உயிர்; இன்று உலகச் சமுதாயம் அன்பின்மையால் பலஇன்னல்களுக்கு இரையாகி வருகின்றது. சாதியாலும், மதத்தாலும், மாறுபட்ட பொருளாதார இலட்சியத்தாலும், நிறதுவேசத்தாலும் பாதிக்கப்பட்டு எங்கும் பகைமையும் பூசலும் தாண்டவமாடுகின்றன. அவைகளை எல்லாம் ஒழித்து மக்கள் வாழ்க்கையில் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ண வல்லது அன்பு நெறியே. இதைத்தான் திருவள்ளுவர் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

இன்று இங்குப் பறக்கும் குறட் கொடி அந்த அன்பு நெறியை உலக மக்கள் அனைவருக்கும் போதிக்கும் கொடி. இந்தக் கொடி குறிக்கும் அன்புத் தத்துவம் உலகத்திலுள்ள மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதியவேண்டும்; இந்த அன்பு நெறி உலகம் எங்கும் மலர வேண்டும்; அம்மலர்ச்சிக்குத் தமிழ் மக்களாகிய நாம் எல்லாம் முழு மனதுடன் உழைப்போமாக. வாழ்க வள்ளுவர்; வாழ்க திருக்குறள்; வாழ்க இவ்வுலகம்.

*14—1—70-இல் தமிழ்ச் சங்கச் சார்பில், திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர், 2000 ஆண்டு நிறைவு விழாவில் நிகழ்த்திய*

# தலைமைப் பேருரை

---

**தமிழவேள் பி. டி. இராசன்**

***தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.***

இன்று திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவு விழா வைக் கொண்டாட இங்கே கூடியிருக்கின்றோம். இந்த விழா, தமிழ் மக்களுக்கு ஒரு மாபெரும் பெருமையினை அளிக்கிறது. தமிழ்நாட்டின் சிறப்பைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட இரண்டாயிரம் ஆண்டு விழா தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இதுதான் முதல் விழா.

நம் மக்களிடம் சரித்திரம் எழுதும் பழக்கம் இல்லை. சரித்திர சம்பந்தமான பொருள்களைப் பாதுகாக்கும் பழக்கமும் இல்லை. இப்படி நாம் சரித்திரத்தில் எவ்வித கவனமும் செலுத்தாமல் இருந்தது பெரிய குறைபாடாகும். இந்தக் குறைபாட்டின் காரணமாக, நம்முடைய திருவள்ளுவர் எங்கே பிறந்தார், எப்பொழுது பிறந்தார், பெற்றோர்கள் யார், என்ன தொழில் செய்தார், எங்கே வாழ்ந்தார், எப்பொழுது மறைந்தார் என்று திட்டமாக அறிய முடியவில்லை. இது போன்ற குறைகள் இனியும் ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகையால் திருவள்ளுவரின் எழுத்தைக்கொண்டே அவருடைய வாழ்க்கையை ஓரளவு ஊகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்களுடனும் அவர் ஒன்றிப் பழகியவராக இருந்திருக்க வேண்டும். அரசு, ஆட்சிமுறை, இல்லற வாழ்வு, துறவற வாழ்வு போன்ற எல்லாத்துறைகளிலும் அவர் கூர்ந்து கவனிக்கும் வாய்ப்புப் பெற்றவராக இருந்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் அருள் அவனுக்குப் பூரணமாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் 1330 அருங்குறள்களில் உலகிலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றியும் தெளிவாகக் கூற முடிந்தது என்று நாம் கருத வேண்டும். அதனால், அவர் புலமை, சாதாரணப் புலமை அன்று, தெய்வப் புலமை ஆகும். எடுத்துக்கொண்ட பொருளைச் சுருங்கக் கூறி, விளங்கவைப்பதில் அவருக்கு ஒப்பாக யாரையும் கூற முடியாது. மேலும் திருக்குறளில் பொருள்களை முறையாக, இதற்குப் பின் இது என்று அவர் அமைத்திருக்கும் முறை வியக்கத்தக்கதாகும். எல்லோருக்கும், எக்காலத்திற்கும் பொருந்துமாறு ஒரு நீதி நூலை 2000 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவரால் எப்படி எழுத முடிந்தது என்பதை

சிந்திக்கும்பொழுதுதான், அவருடைய பெருமையை நாம் உண்மையாக உணர முடிகின்றது.

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் சமுதாயம் எப்படி இருந்திருக்கும் என்று பார்க்கின்றபோது தர்மம், அதர்மம், கொடையாளி, கருமி, ஏழை, பணக்காரன், நல்லவன், கெட்டவன், இப்படி நல்லதும் கெட்டதும் கலந்த சமுதாயமாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

இன்றைக்கு வள்ளுவப் பெருந்தகையின் இரண்டாயிரம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு நமக்குத் தகுதி இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்லலாம். திருவள்ளுவர் காலத்தில் இருந்ததைவிட இப்பொழுது சமுதாயம் முன்னேறி இருக்கிறதா, அல்லது சீர்குலைந்து இருக்கிறதா என்று கேட்டால், சீர்குலைந்து இருக்கிறது என்று உறுதியாய்க் கூறலாம். அவர் கூறிய கருத்துக்களில் முக்கியமான வாய்மை, நடுவு நிலைமை, ஒழுக்கம் இவைகளை நாம் கைவிட்டுவிட்டோம். அதிகாரம், பணம் இந்த இரண்டுக்கும்தான் இன்று மக்கள் பயப்படுகிறார்கள். அதிலும் அதிகாரத்தைப் பணம் ஆட்டிவைப்பதைப் பார்க்கின்றோம். இதனால்தான் நாம் நாளுக்கு நாள் தேய்ந்து, நலிந்துவருகின்றோம்.

இருந்தாலும், அதிர்ட்டவசமாகத் தமிழன் அடியோடு கெட்டுவிடவில்லை; இன்னும் சில நல்ல குணங்கள் அவன் இரத்தத்துடன் கலந்து இருக்கின்றன. அதனால், திருவள்ளுவர் பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதையும், தமிழின் பெருமையையும் அவன் இன்னும் மறந்துவிடவில்லை ஆகவே தமிழன் உய்வதற்கு இடமிருக்கிறது. இனியாவது, ''குறள் வழி நடந்து, நம்மை நாமே உயர்த்திக்கொண்டு, மனித இனத்தையும், தமிழ்ப் பண்பையும் காப்பாற்றுவோம்; பேச்சைக் கூடுமானவரை குறைத்துக்கொண்டு செயலில் இறங்குவோம்'' என்று நாம் இன்று முதல் உறுதி எடுத்துகொள்வோமாக.

என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்லக்கூடியது இதுதான். இப்போது இருக்கும் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில், திருக்குறளையும், திருவள்ளுவரையும் மக்களுக்கு நினைவுபடுத்தி அவர்கள் குறள் வழி நடக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியது என் கடமையாகும். நான் தமிழ் மக்கள் மீது இன்னும் நம்பிக்கை வைத்திருப்பவன். அவர்கள் மனம் வைத்தால் நம் முன்னோர்கள் எந்த உயர்ந்த நிலையில் இருந்தார்களோ அந்த நிலைக்கு வரமுடியும் என்று கூறி, அந்நிலையை அடைய, எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருள் பாலிக்கும்படி வேண்டுகிறேன்.

# நற்றமிழில் நாடகம்

ஏ. என். பெருமாள், எம். ஏ., பி. டி.,
ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

ஆன்றோர்கள் தங்கள் ஆய்வின் திறத்தால் வரலாறு கண்ட காலம் தொட்டே தமிழ் நாடகம் சிறப்புற்றிருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். "கி. மு. மூன்றும் நூற்றாண்டிலோ அல்லது அதற்குச் சற்று முன்னரோ நாடகத் தமிழ் உயர்நிலை உற்றிருத்தல் வேண்டும்..... நாடகத் தமிழ் உயர்நிலை, வீழ்நிலை, அழிநிலை ஆகிய மூவகை நிலைகளை அடைந்து உருக்குலைந்த பின்னரே நாம் அதனைக் காண்கிறோம்"[1] என்று மொழிகிறார் பரிதிமாற் கலைஞர். தனது முத்தமிழ் முழக்கத்தில் பேராசிரியர் ஜி. சுப்பிரமணியம் "சரித்திர வரலாற்றிற்கு முற்பட்டதாகிய மிகத் தொன்மை வாய்ந்த காலத்திருந்தே தமிழ் மக்கள் நாடகக் கலையில் நன்கு தேர்ச்சியுற்றிருந்தனர். இதை இயல் இசை நாடகம் எனத் தமிழை அவர்கள் முத்திறப் படுத்திய முறைமைகொண்டே நாம் அறியலாம்" என்று உரைக்கின்றார்.[2] சிந்தனை உலையிலிட்டு இப் பெரியோர்களது கூற்றுக்களை ஆராய்ந்தால் பல உண்மைகள் தோன்றாமற் போகா.

முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் மூன்று பாகங்கள் அடங்கியது அகத்தியம் எனப் பண்டை உரையாசிரியர்கள் வாயிலாக அறிகிறோம். "தூய மனத்தில் பொங்கி எழுந்தது இயற்றமிழ்; தூய வாயின் முழக்கமே இசைத்தமிழ்; தூய மெய்யின் இயக்கமே கூத்துத் தமிழ்" என்று பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார்[3] கூறியுள்ளார். குறையில்லா அறவாழ்வினை இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழனுக்கு முத்தமிழில் சிறந்து விளங்குதல் இயலாத ஒன்று அன்று. முதன் முதலில் முத்தமிழைப் பற்றிய குறிப்புத் 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்று பரிபாடலில் வருகிறது. பரிபாடலை ஆறும் நூற்றாண்டில் எழுந்த நூலாகக் கருதித் தமிழ் மூவகைப்பட்டது என்ற

---

1. நாடகவியல்—முகவுரை: பக்கம் 13-14.
2. முத்தமிழ் முழக்கம்—ஜி. சுப்பிரமணிய பிள்ளை, பக்கம் 112.
3. பிறந்தது எப்படியோ?—முத்தமிழ்—தெ. பொ. மீ. பக்கம் 17

கொள்கை கி. பி. 5ஆம் நூற்றுண்டளவில் தோன்றியிருக்க வேண்டு மென்று தனது ஆய்வின் பலனுக வையாபுரிப் பிள்ளை[4] கூறுகிருர்.

அழிந்தன போக மிஞ்சிய நூல்களில் மூந்தியது என்று அனைவ ராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தொல்காப்பியத்தில் நாடகம் என்ற சொல் ஒரே ஓர் இடத்தில் வந்துள்ளதைக் காணலாம்.

‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனுர் புலவர்’ (பொரு. அக. 53)

இச்சூத்திரத்திலுள்ள ‘நாடக வழக்கினும்’ என்னும் தொடருக்குப் ‘புனைந்துரை வகையானும்’ என்று நச்சினுர்க்கினியர் உரை எழுதுகிருர். ‘நாடக வழக்காவது சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தன வாகத் தொகுத்துக் கூறுதல்’ என்று இளம்பூரணர் அதனை விளக்கிக் காட்டுகிருர். இருவர் கூறுவதையும் தொகுத்துக் கண்டால் நாடகத் துக்குப் புனைந்துரைத்துச் சுவைபட மொழிதல் இன்றியமையாத கூரு கும் என்பது புலனுகும். வையாபுரிப் பிள்ளை ‘நாடக வழக்கு’ என்ற இடத்துக்கு விளக்கம் சொல்லும்போது ‘தற்காலத்துக் கருத்துப்படி அமைந்த நாடக நூல்கள் பெருவரவினவாகி அவற்றிலுள்ள வழக்கு நன்குணரப்பட்ட பின்னரே இந்தச் சூத்திரம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். இதன்கண் உள்ள நாடகம் ஆங்கிலத்தில் ‘Drama’ என்று கூறப்படுவதாகும்’ என்று கூறுகிருர்.[5] இதிலிருந்து இப்பேராசிரியர் தொல்காப்பியர் காலத்திலேயே நாடகம் பெருவழக்காக இருந்ததை நம்புகிருர்.

இதே சூத்திரத்தில் மூன்ருவது வரியில் ‘கலியே பரிபாட்டு’ எனக் கூறப்பட்டுள்ளது நோக்கற்பாலது. இசைத் தமிழுக்குப் பரி பாடல் ஒத்துக்கொள்ளப்பட்டதுபோல் நாடகத் தமிழுக்குக் ‘கலிப்பா’ ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கருத இடம் இருக்கிறது. கலித் தொகையிலுள்ள பாடல்களைக் கூர்ந்து நோக்கினுல் ஒவ்வொன்றிலும் ஒரு சிறு நாடகம் நடப்பதைக் காணலாம்.

முன்பு நாடகத்தைக் கூத்து என்றே வழங்கி வந்துள்ளனர், சிவ பெருமானுடைய தாண்டவத்திலிருந்து நாடகம் தொடங்கியதாகவே

---

4. இலக்கியச் சிந்தனைகள் — நாடகக் கலையின் வரலாறு — வையாபுரிப் பிள்ளை, பக்கம் 167.
5. இலக்கியச் சிந்தனைகள் — நாடகக் கலையின் வரலாறு — வையாபுரிப் பிள்ளை, பக்கம் 167-168.

புராணங்கள் கூறும். சுவையாகப் பேசுவதிலும் புனைந்துரைப்பதிலும் திறமையுடையவர்கள் கூத்தர்கள். 'அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன'(பொரு. கற். 27. 5.) என்ற தொல்காப்பியச் சூத்திரவரி இதனைச் செவ்வனே விளக்கும். தவறிழைத்த தலைவனைப் பற்றி இதமாகவும் பதமாகவும் தலைவியிடம் கூறி அவர்களை இணைவிக்கத் தக்கவன் கூத்தனே யாவன். 'கூத்தர் என்போர் நாடகசாலையர். அவர்கள் தோன்றுபட்ட நன்றுந் தீதுங் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக் காட்டுதற்கு உரியராகலிற் கூத்தர் இவையுங் கூறுபவென்றுர்'. இது நச்சினார்க்கினியர் கூறும் உரை. இளம்பூரணர் 'கூத்தர் எல்லா நெறியினாலும் நயந்துரைக்க வல்லர் ஆதலான் அவர் மேலன என உரைத்தார்'என்று உரைக்கிறார்.

அடியார்க்கு நல்லாருடைய சிலப்பதிகார உரையிலிருந்து[6] கூத்தியல் நூல்கள் பல இருந்திருக்க வேண்டுமென்று அறிகிறோம். இந்திர காவியம், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பஞ்சபாரதீயம், பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், குணநூல், பரதம் ஆகியவை நாடகத்தைப் பற்றிக் கூறும் பண்டை நூல்கள். 'இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்பல்' என்பது விதி. ஆகையினால் இத்தகைய கூத்து நூல்கள் இருந்திருக்குமாயின் பல நாடக நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது ஒருதலை. இந்த இடத்தில் 'செந்தமிழ்' ஏட்டில்[7] 'நாடகத் தமிழ்' என்ற கட்டுரையில் திரு டயசு கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். "பொதுமக்கள் அக்காலத்தில் படிப்பதற்கென்று நாடகத்தை விரும்பாமல், கண்டு களிப்பதற்கென்று நாடகத்தை விரும்பினர் என்று தெரிகிறது." இக்கூற்றிலிருந்து பண்டைத் தமிழர் நாடகத்தை அரங்கிலே கண்டும் கேட்டும் களித்தார்களே அன்றி ஏட்டில் படித்துப் பாராட்டவில்லை என அறிகிறோம். ஆகையினால் நாடகத்தைப் பற்றியுள்ள குறிப்புகள் ஆங்காங்கே கிடைத்துள்ளனவே யன்றி நூல்களாகக் கிடைக்கவில்லை.

அடியார்க்குநல்லார் உரையில்[8] அவிநயக் கூத்து என்பது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பல்வகைக் கூத்து என்றும், நாடகம் என்பது கதை தழுவி வருங்கூத்து என்றும் கூறப்படுகிறது. திவாகரநிகண்டிலே கூத்தின் மறுபெயர்களைக் கூறும் போது 'நடமே நாடகம்..............' என்று சொல்லப்படுகிறது. 'கூத்து என்பது' நாடகக் காப்பியம் அன்று; பரதநாட்டியம் என்றும்

6. அடியார்க்கு நல்லார் உரைப் பாயிரம் —பக்கம் 9-10
7. செந்தமிழ் 1967 சூலை —நாடகத் தமிழ் - பக்கம் 27
8. அடியார்க்கு நல்லாருரை — பக்கம் 80

'Dance' என்றும் வழங்குவனவற்ருேடு ஒத்ததொன்று' என்று மீனுட்சி சுந்தரனுர் கூறுகிருர்.[9] மறைமலையடிகள் கூற்றும் கருதுதற்குரியது. 'கூத்திற்கும் நாடகத்திற்கும் வேறுபாடு என்னை யெனில், கூத்தென்பது ஒரு கதையின் ஒரு பகுதியை ஒருவரேனும் அன்றி ஒரு சிலரேனும் ஆடிக் காட்டுவதும் கதையே தழுவாது ஒரு செய்யுள் பொருளைக் கண், கை, கால், முகம், முதலான உறுப்புக்களின் இயக்கங்களால் ஆடிக் காட்டுவதும், விழாக்காலங்களில் ஒருவரேனும் ஒரு சிலரேனும் பாட்டுங் கொட்டுங்கொண்டு மகிழ்ச்சி மிக்கு ஆடுவதும் எனப் பலதிறப்படும்......நாடகம் என்பதோ முழுவதூஉம் கதை தழுவி வரும் கூத்தாகும்.[10]

நடம் என்பது நடனம். அதுவே நாடகம். நட்டு என்ற அடிச்சொல்லின் அடியாக நடனம் பிறந்திருக்கும். 'நட்டு' என்பதற்கு 'அசைதல்' என்பது பொருள். இலக்கியத்தில் பல இடங்களில்''நடனம்' என்ற பொருளில் 'நாடகம்' பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். கடியலூர் உருத்திரங்கண்ணனுர் பத்துப்பாட்டில், தான்எழுதிய பெரும்பாணுற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய இரண்டிலும் 'நாடகம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஆடுவதிற் சிறந்த விறலியரைக் குறிப்பிடும்போது பெரும்பாணுற்றுப் படையில் 'நாடக மகளிர்' என்றும், நிலா முற்றத்திலே இசை முழக்கத்தோடு நடனங் காண்பதைப் பட்டினப்பாலையில்,

'பாடலோர்ந்தும் நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலன்'

என்றும் கூறுகிருர்.

ஒரு கதையோ அல்லது வரலாற்றினையோ எடுத்துக்கொண்டு அதில் வரக்கூடிய பாத்திரங்களுக்கெல்லாம் நடிகர்களை அமைத்து உரையாடல்களாலும் நடிப்பாலும் அவற்றின் பொருளை அரங்கத்தில் நடித்துக் காண்போர்க்கு விளங்கச் செய்வது இன்றைய நாடகம். இதுபோன்று அக்காலத்தில் நாடகம் இருந்திருக்குமா என்பது ஆய்வுக்குரியது. ஒரு பெண், பாட்டுக்கு அபிநயித்தும் தாளத்துக்குப் பதம் பிடித்தும் ஆடுவதோடு நின்று விடாமல் ஒரு கதையையோ அல்லது ஒரு வரலாற்றினையோ அடிப்படையாகக் கொண்டு அவற்றிற்கு வேண்டிய உணர்வுகளை மெய்யில் காட்டி ஆடி இருக்கலாம். இன்றும் அவ்வாறு நடனங்கள்

9. பிறந்தது எப்படியோ?—முத்தமிழ்-தெ. பொ. மீ. பக்கம் 13
10. சாகுந்தல நாடக ஆராய்ச்சி—மறைமலை அடிகள் பக்கம் 8

நடக்கின்றன. இத்தகைய முறையில் ஒருவர் ஆடிக்காட்டிய 'கண்ணப்பர்,' நாட்டிய நாடகத்தைக்காணும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. ஆனல் இது நாடகமாகாது.

சிலப்பதிகாரத்தில் எட்டு இடங்களில் நாடகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனல் நாம் இன்று காணும் பொருள் ஓர் இடத்தில்கூட இல்லை.

"நாடக மேத்து நாடகக் கணிகையோ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுற"

என்னும் பதிக வரிகளில், நடனமாடும் மங்கையை 'நாடகக் கணிகை' என்றும் அவனது ஆட்டத்தை 'நாடகம்' என்றும் கூறியிருப்பது புலனகும்.

"ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி" (6 : 20 — 21)

என்று கூறுவதில் இந்திரனுக்கு உருப்பசி அவனது செவியகம் நிறைய ஆடலையும் பாடலையும் நல்கவில்லை என்பது விளங்கும். இவ்விடத்தில் நாடகத்தில் செவியகம் நிறைக்கும் இசைக்கே சிறப்புக் கொடுத்திருப்பதாகத் தோன்றும். ஆய்ச்சியர் குரவையில் ஒரு சிறிது பொருள் மாற்றத்தோடு அச்சொல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 'கண்ணகியுந் தான் காண ஆயர்பாடியிலெருமன்றத்து மாயவனுடன் தம்முனுடிய வால சரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாமென்றாள்'. இங்குக் கண்ணனுடைய வரலாற்றின் ஒரு பகுதியைப் பெண்கள் சிலர் சேர்ந்து பாடலோடு கூடி ஆடுவது குறிப்பிடப்படுகிறது. "நாடகம் கதை தழுவ வரும் கூத்து" என்று அடியார்க்கு நல்லார் கூறும் கருத்துக்கு, ஆயர்பாடியில் பெண்கள் ஆடிய ஆட்டம் ஒரு சிறிது பொருந்துவதைக் காணலாம்.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் 'நடனம்' என்ற பொருளிலேயே ஏழு இடங்களில் 'நாடகம்' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையில்,

"ஆடற் கூத்தினே டவிநயந் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' (19 : 79—80)

என்று வரும் இடம் நம்மைச் சிறிது சிந்திக்கத் தூண்டுகிறது. ஆடற் கூத்தினேடு அவிநயம் தெரிவோர் அதிகம் இருந்திருக்க வேண்டும். முது கூத்தனர், மதுரைத் தமிழ்க் கூத்தனர் ஆகிய தண்டமிழ்ப் புலவர்

களின் பெயர்களே அதற்குச் சான்று பகரும். பெண்களன்றி ஆண்களும் ஆட்டக் கலையில் சிறந்துள்ளமையைக் குறுந்தொகைச் செய்யுளொன்று தெளிவாகக் காட்டுகிறது.

"யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலு மோராடு களமகளே" (குறு 31)

இப்பாட்டில் கூறப்படும் ஆட்டனத்தியும், பதிற்றுப்பத்தில் பாராட்டப்படும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் கூத்துக் கலையில் வல்லவர்கள் என்று கூறலாம். இதிலிருந்து அக்காலத்தில் சான்றோர்களும் ஆன்றோர்களும் ஆட்டக் கலையை ஆதரித்ததோடு அமையாமல் அதனைப் பயின்றும் சிறந்தும் இருந்திருக்கிறார்கள் என்று துணியலாம்.

பெருங்கதை வடமொழித் தொடர்பு கொண்டு இயற்றப்பட்ட காப்பியம். அக்காலத்தில் நாடக நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடம் இருக்கிறது.

'இசையோடு சிவணிய யாழி நூலும்
நாடகப் பொருளும் .... .................' (I. 32 : 5–6)

என்று கூறுவது இசையோடு பொருந்திய யாழ் நூலையும் நாடக நூலையும் குறிக்க இடமிருக்கிறது. கூத்தும் நாடகமும் வேறு வேறாகக் கருதப்பட்டன என்று கருதவும் ஓரிடம் இருக்கிறது.

"வெந்திறல் வேந்தனு நன்னெற வருளி
வாயிற் கூத்துஞ் சேரிப் பாடலும்
கோயி னாடகக் குழுக்களும் வருகென" (I. 37 : 87–89)

என்னும் வரிகளில் கூத்து, பாடல், நாடகம் ஆகியவை வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டிருப்பது நோக்குதற்குரியது. ஒவ்வொன்றும் வெவ்வேறு குழுவினரால் நடத்தப்பட்டது என்று எண்ணலாம், இவை தவிரப் பெருங்கதையில் 'நாடகம்' என்ற சொல் வருகின்ற பத்து இடங்களிலும் நடனம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. 'நாடக மகளிர் நாலிரு பதின்மருள்' என்று இரண்டு இடங்களிலும் (IV 10 : 72; I. 58 : 66) 'நாடக மகளிர் நாலெண் மதின் வரும்' (I. 37:218) என்றும் 'நருமதை முதலா நாடக மகளிரும்' (IV. 12:119) என்றும் வருவதனால் பல மகளிர் ஒரு குழுவாகச் சேர்ந்து நாடகம் நடித்தனர் என்று கொள்ளலாம். பெண்கள் ஆண்வேடம் புனைந்து ஆடுதல் சிலப்பதிகார காலம் முதல் வழக்கம் என்பதை 'ஆய்ச்சியர் குரவை' கொண்டு முடிவு செய்யலாம். இதே வழக்கம், முன்பு ஆங்கில நாட்டி

லும் இருந்ததாகப் 'பிரிட்டனது நாடகம்' என்ற நூலில் அலாரியசு நிகால் கூறுகிறார். (The old device of a girl dressed as a boy still held the boards — British Drama by Allareyce Nicoll—Page 109) ஆகவே பெருங்கதை 'காலத்தில்' பெண்கள் ஆண்வேடம் புனைந்து ஆடியிருக்கலாம். இடைக்கால இலக்கியமாகிய கலிங்கத்துப் பரணியில் ஓரிடத்தில் 'நாடகம்' வருகிறது.

"நாடகாதி நிருத்த மனைத்தினும்
நால்வ கைப்பெரும் பண்ணினு மெண்ணிய
ஆடல் பாட லரம்பைய ரொக்குமவ்
அணுக்கி மாரு மநேக ரிருக்கவே" (III. 21)

நாடகம் முதலான நடனங்கள் என்று கூறுவதனால் இந்நூலிலும் 'நடனம்' என்ற பொருளில்தான் 'நாடகம்' பயன்படுத்தப்பட்டுள்ளது.

மயிலைப் பற்றிப் பாடும்போது கம்பன் 'நாடகமயில்' என்று கூறுகிறான். போரில் தலை வெட்டப்பட்டுள்ள வீரர்களது கவந்தமாடுவது அரம்பையர் மருளப் பலவிதமான நாடகத்தோடு ஒத்துக் காணப்படுவதாகக் கவி மன்னர் குறிப்பிடுகிறார்.

"கேடகத் தடக்கையர் கிரியின் றோற்றத்தார்
ஆடகக் கவசத்தர் கவந்த மாடுவ
பாட கத் தரம்பையர் மருளப் பல்வித
நாட கத் தொழிலினை நடிப்ப வொத்தவே" (I. I. 486)

'பலவித நாடகத் தொழிலை' என்று குறிப்பிடுவதால் பலவிதமான உணர்வுகளைக் காட்டும் வெவ்வேறு விதமான நடனம் என்று கொள்ளலாம்.

'பரத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்' (IV-490.3) என்று கூறுவதினால் வடமொழியில் நாடக இலக்கணம் வகுத்த பரத முனிவரது நூல் முறைக்குப் பொருந்தும் நாடகம் என்று பொருள் கொள்ள இடமிருக்கிறது. கம்பர் வடமொழி இலக்கியம் கற்றவர். பரதருடைய நாடக இலக்கணத்தையும் கற்றிருக்கலாம். ஆகையினால் இந்த இடத்தில் தற்காலத்துக்குப் பொருந்தக் கூடிய முறையில் இச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகக் கொள்ளலாம். 'கந்தர்ப்ப மகளிராடு நாடகம்' (V-201:4) 'அலகைகள் நாடகம் நடிப்ப' (VI-4110;3) ஆகிய இடங்களில் நடனத்தையே நாடகம் குறிப்பிடுகிறது. கம்பரது காலத்தில் வடமொழியின் தொடர்பு காரணமாகக் கூத்து நிலையிலிருந்த நாடகம் ஓரளவுமாறி நவீன வளர்ச்சியின் நுழைவாயிலில் அடி எடுத்து வைத்ததாகக் கொள்ளலாம்.

இருபதாம் நூற்ருண்டுக் கவிஞரான பாவேந்தர் பாரதிதாசன்கூட 'நகர் நோக்கிப் பசுந்தோகை நாடகத்து மாமயில்கள் நண்ணியாங்கு' என்று கூறி[11] நடனம் என்ற பொருளை நாடகம் இழந்துவிடாதவாறு செய்கிருர்.

மனிதன் இயற்கையில் 'போலச் செய்யும்' உணர்வுடையவன். அவ்வுணர்விலிருந்தே நாடகம் வளர்ந்திருக்க வேண்டும். 'நாடு' என்ற வேர்ச் சொல்லுக்குப் பரூேவும் எமனேவும் திரட்டிய திராவிட அடிச் சொல் அகராதியில் (The Dravidian Etymological Dictionary by T. Burrow and M. B. Emeneau) 'போலுதல்' (Resemble) என்ற பொருளைக் கொடுக்கிருர்கள். 'அகம்' என்பதைச் சொல்லாக்க விகுதியாகக் (Formative Addition) கொண்டால் பிறர் செய்தது போன்று செய்வதற்கு 'நாடகம்' என்ற சொல் உருவாகியிருக்கலாம். ஒலி என்ற பொருளில் வரும் அடிச் சொல் 'பாடு'. அதனேடு 'அகம்' சேர்ந்து ஒலிக்கும் காலணியான பாடகம் உருவாகியுள்ளது, இச்சொல்லாக்கத்தை உறுதிப்படுத்துவதாகும். 'காடு' கடம் ஆனது போன்று 'நாடு' நடம் ஆகியிருக்கலாம்.

நாடகம் தனது தோற்றத்திற்காக நடனத்திற்குப் பெரிதும் கடமைப்படுகிறது என்று ஆங்கில அறிஞர் என்றி வெல்சு தனது 'பழமையான இந்திய நாடகங்கள்' என்ற நூலில் கூறுகிருர். (In its Origin all drama may well be indebted to dancing-The Classical Drama of India-By Henry W. Wells Page 11.) முன்பு நாட்டியத்தையும் மக்கள் இரண்டாகப் பிரிக்கவில்லை. இரண்டிற்கும் பொதுவாகக் 'கூத்து' என்றே அழைத்திருக்கிருர்கள். பலவகையான கூத்துக்கள் தமிழ் நாட்டில் இருந்தனவாக அடியார்க்கு நல்லார் கூறுகிருர். சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் போரில் வாகை சூடியபின், பாசறையில் அவ்வெற்றியினைக் கொண்டாடுகிருன். அப்போது கூத்தனெருவன் சாக்கைக் கூத்தாடுகிருன். இத்தகைய கூத்து இன்றும் சில ஆலயங்களில் நடைபெறுகிறது. மலையாள நாட்டில் ஆடப்படும் 'கதகளி'யோடு இது நெருங்கிய தொடர்புடையது. கதை-களி என்று பிரிக்கும்போது 'கதகளி' தமிழோடு நெருங்கிய தொடர்புபடுவதைக் காணலாம்.

பல்வகைக் கூத்துக்களில் முக்கியமானவை வெற்றிக் கூத்து, வசைக்கூத்து, விநோதக் கூத்து என அடியார்க்கு நல்லார் உரையின்[12]

11. பாரதிதாசன்—தமிழியக்கம்—'மங்கையர் முதியோர் எழுக'

12. அடியார்க்கு நல்லாருரை – பக்கம் 81

மூலம் நாம் அறிகின்றோம். இவற்றுள் முன்னவை இரண்டும் தாளத்தின் இயல்பினவாகும்- அவற்றை நடனத்தின்பால் சேர்க்கலாம்.

'விநோதக் கூத்து வேறுபாடுடைத்து
வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்'

இது கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரும் முதலாகவுடையோர் பகைவென்றிருந்த விடத்து விநோதம் காணும் கூத்தாகும். தாள இயல்புடைய கூத்துகளுக்கும் விநோதக் கூத்துக்கும் வேறுபாடு உண்டு என்பதை வெளிப்படையாகக் காட்டிவிட்டார். இத்தகைய கூத்தே நாடகத்துக்கு முன்னோடியாக இருந்திருக்கவேண்டும். பாரத நாட்டின் முதல் நாடகம் 'திரிபுரதகனம்' என்று கூறப்படுகிறது. இது முப்புரத்தின் மேல் சிவபெருமான் அடைந்த வெற்றியைப் பற்றியதாகும்.

மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், தோற்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து, நாட்டியம், நாட்டிய நாடகம், நாடகம் என்று படிப்படியாக வளர்ந்திருக்குமென்று நாடக மன்னர் அவ்வை சண்முகம் கூறுகிறார்[13]. தமிழ்நாட்டில் மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்புற்றிருந்த 'கூத்து' சீரழியக் காரணம் சமண, பௌத்த சமயங்களாகும். இதனை ஈழத்துப் பெரியார் சு. வித்தியானந்தன் 'தமிழர் சால்பு' என்ற நூலில் அழகாக விளக்குகிறார். கூத்துக்களை மக்கள் கண்டு களிப்பதனால் சிற்றின்ப வேட்கை பெருகி அழிவுக்கு அது வழிகோலுவதாகக் கருதி அவற்றைப் பார்க்கக் கூடாது சமணர்கள் தடை செய்தனர். ஏலாதியிலுள்ள இருபத்தைந்தாவது பாடல் இதற்குச் சான்று பகரும்.

'பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகஞ் சாராமை நாடுங்கால்—நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போற் றீர வரும்' (ஏலாதி 25)

பௌத்த சமயம் ஆடலையும் பாடலையும் வெறுத்ததனால் அதில் சேர்ந்தவர்களை மொட்டையடிக்கவும் சீவலாடை அணியவும் செய்தது. கோதைத்தாமம் குழலோடு நீக்கிய மணிமேகலையைப் பௌத்தம் தன்னோடு சேர்த்தது.

முதல் நாடகம் தமிழில் தோன்றியது பத்தாம் நூற்றாண்டுக்குச் சிறிது முன்பாக இருக்கலாம் என்று வையாபுரிப் பிள்ளை நம்புகிறார். இராசராசசோழன் (985—1017) தஞ்சைப் பெரிய கோவிலில் 'இராசராசேசுவர நாடகத்தை' நடிப்பதற்காக ஆண்டு தோறும் மானியம்

13. அவ்வை டி. கே. சண்முகம் — நாடகக் கலை — பக்கம் 7

கொடுத்ததாகக் கட்வெட்டுக் கூறுகிறது.[14] கடலூரிலுள்ள கல்வெட்டு மூலம் சமலாலயப் பட்டர் 1119-இல் 'பூம்புலியூர் நாடகம் இயற்றி அதற் காக அரசனல் இறையிலி நிலம் பெற்ருர், என்றும் அறிகிறோம். 17-ஆம் நூற்ருண்டில் உழத்திப் பாட்டு, குறத்திப்பாட்டு முறையில் முக்கூடற்பள்ளு, திருக்குற்ருலக் குறவஞ்சி ஆகியவை நாடக உலகில் வருகின்றன. 18-ஆம் நூற்ருண்டில் அருணசலக் கவிராயர் கீர்த்தனை களின் உதவியினுல் இராமநாடகத்தை இயற்றினர். 19-ஆம் நூற்ருண் டில் பரிதிமாற்கலைஞர், சுந்தரம் பிள்ளை, பம்மல் சம்பந்த முதலியார் ஆகி யோர் பெரிதாக முயன்று அரிய நாடக இலக்கியங்களை உருவாக்கினர். 20-ஆம் நூற்ருண்டும் பல நாடக ஆசிரியர்களைக்கண்டு கொண்டே இருக்கிறது. இயலாலும் இசையாலும் சிறந்து விளங்கும் தமிழன்னை நாடகத்தாலும் தனிபெருசிச் சிறப்பாள் என்பது உறுதி.

---

14. வையாபுரிப்பிள்ளை -- இலக்கியச் சிந்தனைகள் — நாடகக் கலையின் வரலாறு பக்கம் 172

---

## மதிப்புரை

**'சிவலிங்க வழிபாடு'**
**ஆசிரியர் : திரு. சி. சத்தியமூர்த்தி, M, A, B. O. L.,**
**விலை ரூ. 2. (பக்கங்கள் 120)**

ஆசிரியர் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் எம். ஏ. பட் டத்தின் ஒரு பகுதியாகச் செய்த ஆய்வே, இந்நூல் வடிவில் வெளிவந் துள்ளது. சிவலிங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது பற்றி மேலைநாட்டிலும், தமிழ் நாட்டிலும் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள பல நூல்களையும், மற்றும் தான் கண்டு கேட்டு ஆய்ந்த பலவற்றையும் ஒப்புநோக்கிப் பொருத்தமில்லாதவைகளை நீக்கிக் "கந்தழி" எனச் சங்க காலத்தில் வழங்கியதே இலிங்கம் என்பதை ஆசிரியர் இந்நூலில் தெளி வாக விளக்கியுள்ளார்.

தெரிந்தோ, தெரியாமலோ சிவலிங்கத்தைப் பற்றித் தவருன கருத் துக்கள் வெளிநாட்டாரிடையே பரப்பப்பட்டுவிட்டன. அவைகளை மறுத்து அறிஞர்கள் ஏற்கும் வகையில் ஆசிரியர், விஞ்ஞானக் கண் கொண்டு ஆராய்ந்துள்ளார். சமயத்துறையில் ஆராய்ச்சி செய்வோர் களுக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சிவலிங் கத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய உண்மை வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்புவோர்கள் இதனைப் படித்தல் நன்று.

கி. ப.

18—1—70 இல், தமிழ்ச் சங்கச் சார்பில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் பாடப்பெற்ற கவியரங்கப் பாடல்கள்

# திருவள்ளுவர் எம் தந்தை

பாவலரேறு ச. பாலசுந்தரம், கரந்தை.

**தமிழ்த்தாய் வாழ்த்து**

விழியாகிக் காலமொரு மூன்றும் விளக்கும்
மொழித்தாயின் தாள்பணிவேம் முன்.

**வள்ளுவர் வாழ்த்து**

அகர முதல எழுத்தெல்லாம், ஆங்கே
நிகழும் இறைஉலகிற் கென்று—தகவுபெற
ஓதி உலகளித்த ஒண்டமிழ் தெய் வப்புலவன்
பாதமலர் வாழ்த்துகவிப் பார்.

**மன்ற வணக்கம்**

பண்ணார் இசையுருவாய்ப் பாரித்துப் பைந்தமிழ்முக்
கண்ணா ஒளிபரப்பிக் கான்மாறிக் கூத்தாடும்
பெண்ணாளும் பாகத்தோன் பிள்ளையொடும் வந்துவந்து
விண்ணோர் வியப்பெய்த வேந்தாய்ப் புலவனுமாய்
மண்ணோர்க் கமிழ்தளித்த மாறனெடு மாறரெனத்
தண்ணார் தமிழ்வரைபார் தாள்பணிதும் அம்மானய்.

கமழ்புகழ்சேர் பாண்டித் துரைத்தேவர் கண்ட
தமிழ்ச்சங்கத் தொண்டுளத்தே தாங்கி—அமிழ்தூறும்
வள்ளுவரீ ராயிரத்தை வான்கமழக் கொண்டாடும்
ஒள்ளியர்க்கென் போற்றி உரித்து.

**அவையடக்கம்**

சிந்தையிருள் நீக்கிஒளி சேரக் காட்டும்
செந்தமிழின் திறனறிந்து சீர்தி ருத்தம்
முந்துபல அணிதிகழச் சீர்ப்ப டுத்து
முகிழ்க்கின்ற கற்பனைத்தேன் தொடையல் பூட்டிச்

சந்தனமுத் தமிழ்க்கவிதை சான்ருேர் கொள்ளத்
தருகின்ற தந்தையிந்தக் கவிய ரங்கத்
தந்தைதமிழ்க் கோல்தாங்கும் தகவு சான்ற
தனிக்கவிஞன் முடியரசற் கென்வ ணக்கம்.

சொல்லசையச் சீரெடுத்தின் னிசைத ளக்கத்
தொடைபுரிந்து சுவையணிகள் பூட்டி முப்பால்
புல்லதமிழ்க் கவிதையெனும் புகழ்மை சான்ற
புதல்வர்களைப் பெற்றளிக்கும் பொற்பு சான்ற
வல்லதமிழ்ப் பாவலராய்க் கவிய ரங்கில்
மகிழ்ந்திருக்கும் ஐவருக்கும் வணக்கம் இந்த
நல்லவைசூழ் நாவலர்கள் சான்ருேர் மற்றை
நல்லியலார் வள்ளுவரை நயந்து போற்ற

வீற்றிருக்கும் அவையத்தார் யார்க்கும் அன்பின்
மிடைந்தவணக் கத்தலங்கள் சூட்டு கின்றேன்
ஊற்றமிகும் முத்தமிழ்ச்சீர் உலக மெங்கும்
ஒலிக்கவிழா ஆற்றுநர்க்கென் உளங்க னிந்த
போற்றிமிகு வணக்கம்வாழ் கழகத் தார்க்கென்
புகழ்மிகுந்த பாராட்டும், பெருமை சான்றீர்!
ஏற்றமிகும் வள்ளுவர்ஈ ராயி ரத்தில்
எம்தந்தை எனப்பாட எனைப்ப ணித்தீர்.

விழிபுரையும் மொழிவளரக் கழகங் கண்டு
விளங்குதமிழ் மதுரையில்வாழ் சான்றீர், பண்பு
கொழிதமிழின் பாலன்பால் குறையே னென்ருே
கூரன்பின் நிறையாலோ நண்பி ஞலோ
பிழியமிழ்தக் கவிமொழியும் புலவோர் சூழ்ந்த
பீடுமிகு கவியரங்கில் மகவா என்னைக்
கெழுதகவால் நிறுத்தியுள்ளீர் மழலை பேசும்
கிள்ளைமொழி பிள்ளைமொழி போலக் கொள்வீர்!

பொருள்:

தந்தை இயல்பனைத்தும் தக்கபடி ஓர்ந்தினிய
பைந்தமிழாற் செப்புவனற் பா.

மக்களொடும் மாசில்லா மனையா ளோடும்
மாறுபடாச் சுற்றமொடும், வாழ்வில் நேரும்
சிக்கலெல்லாம் ஏற்றவற்றைத் தேர்ந்து, சொல்லின்
செம்மையினல் சீர்த்திமிகு செயலால் மாற்றித்

தக்கபடி குடிதாங்கி மூத்தோர்ப் போற்றித்
தளராமல் பொருளீட்டித் தலைமை தாங்கி
ஒக்கலுக்கும் வறியவர்க்கும் உதவி, மக்கள்
உயரவையுள் முன்பிருக்கச் செய்த லோடே

சான்றோராய் ஆக்குதலும் கடனும் என்று
தமிழ்நூலார் கூறுவர், மற்றுலகி யல்பால்
ஆன்றபொரு ளீட்டிதன தருங் குடிப், பின்
அல்லலுரு வகைஏமம் ஆக்கல் வேண்டும்
ஊன்றிமிக நோக்குங்கால் என்னு ளத்தில்
ஒருகோடி வினைக்கள்எழ, விடையோ ஒன்றும்
தோன்றாமல் திகைத்தேனப் போதெம் தந்தை
சோதிவடி வாய்முன்னர்த் தோன்றி வந்தார்.

தந்தாய்! நீ என்தந்தாய்? என்றேன், என்றன்
தனயா!வா எனத்தழுவி நின்றார்; கேட்டேன்
எந்தாய்யார்? உற்றார்யார் எமக்கு வைத்த
ஏமவைப்பிங் கெவை? என்றேன் முறுவல் பூத்து
மைந்தா! முன் மேலோர்கள் தொகுத்து வைத்த
வாய்மையெனும் எழில்வாய்ந்த மெய்ப்பொ ருள்நூல்
நுந்தாய்;வாழ் அகம்புறமாம் திணை நூல் சுற்றம்
நொய்ம்மையிலாக் கலைகளெலாம் நண்பர் என்றார்.

அருளறிவு அறமின்சொல் ஈகை என்னும்
அழகுறுப்பால் அமைந்தொளிரும் சிந்தை என்னும்
அருமகவென் மக்கள்;உனக் கவ்வு றுப்பிங்(கு)
அமைந்துளதால் என்மகவே ஆவாய்; என்மேல்
இருளுருவாய் மறம்பாவம் மடமை என்னும்
இடுக்கண்பல வந்தன,தா ளாண்மை என்னும்
கருவியினால் கடந்தவற்றை வென்றென் மக்கள்
காலமெலாம் மேலவராய் வாழ வேண்டி

நன்செயொடு புன்செய்நறுந் தொழில்செய் கூடம்
நல்வணிக நிலையமொடு, நசைமிகுக்கும்
கன்னமைந்த அணிமணிகள் மாடு கன்று
கார்தவழும் மாடநிறை வீடு, மற்றும்
என்னென்ன வேண்டுமவை யாவும் ஈட்டி
இருமையினும் பயன்கொள்ள முப்பா லாகச்
சொன்னவற்றை ஆக்கிவைத்தேன் துய்ப்பீர்! என்றார்
சொன்னவெலாம் யாண்டுளஎம் தந்தாய்? என்றேன்.

ஒலியழகு கமழுநறுஞ் சொல்நெருங்கி
ஒளிவீசும் தமிழ்மொழியாம் அகலி டத்தே
நிலவுகுறள் வெண்பாவாம் மதிலாற் சூழ்ந்த
நிறைநிலத்திற் கெனையழைத்துச் சென்றார் ஆங்கே
கலிகொள்வான் தொட்டுநவ மணிக ளாலே
கதிர்வீசும் மாளிகையைக் காட்டி உள்ளே
உலவுதமிழ்க் காதலெனும் அணிகள் யாவும்
உளம்சிலிர்க்கக் காட்டியஃ தின்பத் துப்பால்

என்றுரைத்தார்; உள்புகுந்தேன் அடடா! என்னே!
எழிலணங்கோ ஆய்மயிலோ மாதர் கொல்லோ
என்றுணர்வு தடுமாறும் உருவைக் கண்டேன்
இருவிழியின் குறிப்பறிந்தேன் கூடி நின்றேன்
சென்றநிலை மறந்தேன்பின் தெளிந்தேன் மற்றைச்
செயல்புரியப் பிரிந்தபொழு துணர்வால் பூத்து
நின்றபிரி வுத்துயரால் மீண்டும் கூட
நெருங்கியபோ தணங்கூடிப் புலந்த இன்பம்

தாமரைக்கண் ணுனுலகுந் தருமோ? ஆங்கே
தமிழ்சுரக்கும் அமிழ்துண்ணும் போது, தந்தை
காம,மிது பொருள்துணையா லாகும் என்று
கடிதழைத்துப் புறம்போந்து தொழிற்கூ டத்தை
ஏமமுறக் காட்டி நின்றார்; என்ன சொல்வேன்!
பொருள்படைக்குந் தொழிலுழவர், அவற்றைக் காக்க
நாமமுற நிற்கின்ற படைகள், நேர்மை
நாட்டுகின்ற அரசர், நல் லமைச்சர் கல்வி

முற்றியபல் பெரியார்கள் ஒற்றர் தூதர்
முந்திவந்து துணைபுரியும் நண்பர் எல்லாம்
சுற்றிலும்சூழ்ந் தவரவர்தம் கடமை செய்தார்
சூழ்ச்சிசெய்து துன்புறுத்தும் கொடியர், பண்பா
டற்றசிறு இனத்தவர்வன் கயவர் கூடா
அன்பினரும் ஒளிந்திருந்தார், பின்னும் நோக்க
தொற்றுநோய் புரிசூது கள்ப ரத்தை
தூற்றுபவர் நாணமிலார் நன்றி யில்லார்

சிலரங்கே கலந்திருக்கக் கண்டேன்; தந்தை
செய்தொழிலில் இவர்சேரல் இயற்கை; நீதான்
புலமுடையோ னுகியிவர் புகுதா வண்ணம்
புறப்படுத்து வலங்கொள்ள வேண்டுமென்றார்;

நலமுடனித் தொழிற்கூடம் நடக்க வேண்டும்
நறுமூலப் பொருளெங்கே விளையும்? என்று
சொலுமுன்னர்த் தந்தையெனை அழைத்து நீண்ட
தூயநிலப் பரப்படைந்தார்; பசுமை யோடு

விளங்குமொரு பகுதியினைச் சுட்டிக் காட்டி
விளைபுகழ்இல் லறமாம்நன் செய்யென் றார்,பின்
துளங்குபுதர் நெடுமரங்கள் திகழும் அஃதே
வீடளிக்கும் துறவறமாம் புன்செய் என்றார்
வளங்கமழும் இருநிலமும் இருநிலத்தே
வாழ்க்கைக்காம் பொருள்விளைக்கும் அவ்வப் போதும்
உளங்குழைந்துன் உடல்வருந்தப் பாடு பட்டால்
ஒண்பொருளை விளைவுசெய்து கொளலாம் என்றார்.

நெருங்கி நின்று நோக்கினன்வான் சிறப்பி னேடு
நீத்தாரின் ஒளிபரவ அறத்தின் ஆறு
மருங்கெழுந்து பாயும்மனை வயலைக் கண்டேன்
மனைவாழ்க்கைத் துணைநலமாம் செந்நெல் ஓங்க
விரும்புமக வெனும்கரும்பும், அன்பு முற்றி
விருந்தெனும்செவ் வாழைகளும் விளைந்து நிற்க
ஒருங்கதனுள் அழுக்காறு புறங்கூற் றாதி
ஊறுதரும் களைகளுமாங் கிருக்கக் கண்டேன்.

தளர்ந்துதமிழ்த் தந்தையினை நோக்க லுற்றேன்.
தளராதே ஒழுக்கமெனும் கருவி கொண்டு,
வளர்ந்துவரும் பயிரிடையே தோன்று கின்ற
வன்களையைத் தூரறுத்து வாகை கொள்க!
கிளர்ந்துவரும் நிலத்திலெலாம் விளையும், ஆங்கே
கேடுசெயும் களைபறித்துக் கேண்மை செய்யத்
துளிர்த்துவரும் தூயபயிர் காக்க! என்றார்
துறவறமாம் காட்டுநிலங் காட்டக் கண்டேன்.

அருள்பழுத்த மாமரங்கள், தவச்சி றப்பாம்
அணிசெய்பலா மரம்,வாய்மைப் பழம ரங்கள்
பொருள்கமழப் பூத்துநிற்கும் காட்சி கண்டு
பூரித்தேன் உள்புகுந்தேன், புதருக் குள்ளே
இருளுறுக்கும் பொய்ம்மை,கொலை, களவு, கூடா
ஒழுக்கமெனும் நச்சுமரம் இருக்கக் கண்டேன்
மருளுமென்றன் நிலைகண்ட தந்தை பிள்ளாய்!
வாட்டமுறேல் அவாவறுத்தல் எனும்வா ளாலே

மண்டி நிற்கும் கொடும்புதரை மடித்துச் சாய்த்து
வளர்கின்ற மெய்யுணர்வால் புலேசினத்தைத்
துண்டுசெய்து தூய்மைவளம் பெறுக! என்றுர்
சொல்லிய இவ் விருநிலத்தும் விளேப வற்றைக்
கொண்டுதொழில் வாணிகமாம் பொருட்பால் பற்றிக்
குறுகுகஇன் பத்துப்பால் என்றுர்; தந்தை
பண்டுநமக் களித்திருக்கும் பயனுர் செல்வப்
பாங்கறியா தேழைகளாய்ப் பரந்து கெட்டோம்.

என நாணித் தந்தையின்ஈ ரடிகள் பற்றி
ஏத்துதற்கு முயலுங்கால் அவரைக் காணேன்
மனமோய்ந்தேன் மறைந்தருவாய் முதற்பா வல்லார்
வாய்மலர்ந்த மொழிகேட்பின் மான முள்ளோர்
கனவானும் மறவார், அச் சொற்சுடர்கள்
காதுவழி சென்றுகருத் தறையை முட்டி
அனலாக எரிக்கிறது ஆம் உண்மை உண்மை
அவர்தந்தை நாம்மக்கள்! ஒவ்வா தம்மா!

சொன்னவற்றை அப்படியே சொல்லு கின்றேன்
"தொழுகின்றீர் சொன்னபடி நடக்க கில்லீர்
வன்னிலத்தில் விதைத்தவிதை யான, என்றன்
வாயுரைகள்; வழங்குரையாக் கொண்ட தல்லால்
உன்னியுளந் தோய்ந்தொழுகீர், உரைபெருக்கி
ஓதுகின்றீர், பட்டிமன்றம் ஏற்று கின்றீர்,
மன்னியஎன் ஈரடியைப் பற்றிப் போற்றி
வாழ்த்திவிழா எடுக்கின்றீர் வாழ்ந்தீ ரில்லே.

முப்பாலாம் பெருவளத்தை முந்நீர் சூழ்ந்த
மூதுலகில் தமிழகத்தில் ஈட்டி வைத்தேன்
செப்பாலும் வினவாலும் திசைக ளெட்டும்
திருத்தமுறத் திருந்திஒளி பரப்பு வார்கள்
எப்பாலும் சிறக்குமென எண்ணி நின்றேன்
ஈராயி ரத்தும்யான் காண்ப தென்னே?
தப்பாமல் படந்திறந்து சிலேயெ டுத்துச்
சலிக்காமல் விழாநடத்தித் தப்பிக் கின்றீர்!

அகரமுத லானகரம் ஈருச் சொன்ன
ஆயிரத்து முந்நூற்று முப்ப தும்தாம்
நுகரின்அறி வெல்லேயிலே திகழல் கூடும்
நுண்ணறிவோர் போற்றஅவைத் தலேமை மேவும்

பகரும்இசை யாவும்உம் பக்கம் சேரும்
பாரேத்திப் பின்புவரும்—ஒழுகின் இன்பச்
சிகரத்தில் ஏற்றும்'' என இயம்பித் ''தந்தை
இனிதியற்றும் கடமைஎலாம் செய்தேன்'' என்ருர்.

சொற்றமொழி கேட்டுதலை குனிந்தேன், அன்பால்
துயர்நீங்க எனைவிளித்து மேலும் சொன்னர்
''எற்றென்றே இரங்குவன செய்யல், செய்யின்
இருந்திரங்கல் செய்யாதவ் விழுக்கம் நீக்கிக்
கற்றபடி நிற்க''எனக் கழறி ஞர்பின்
''கமழ்சுற்றம் நண்பர்வறியோர்க்க ளித்த
நற்றிறத்தை நவின்ருர்அவ் வுதவி யாற்ருன்
நான்தொகுத்த வளம்அழியா துள்ள''தென்ருர்.

ஆக்கமிகு முப்பாலின் செல்வம் ஏந்தி
அகம்புறமாம் சுற்றம்மிக அழகு பெற்று
நோக்குபவர்க் கின்பமளித் திற்றை நாளும்
நிலைபெற்று வாழ்வதனை நினைக! நெஞ்சை
வீக்குமிசை நாடகம்வாழ் மருந்து, மற்றை
வேறுபட்ட கலைநண்பர்க் கென்முப் பாலுள்
நீக்கமுரு நிலைதந்தேன்; தமிழை ஏந்தி
நின்றெனது வளம்நாடி வந்தி ரக்கும்

புலவர்கள்நன் ஞவலர்கள் கலைஞர் கட்காம்
பொருள்வழங்கி வருவதனல், கவிதைச் செய்யுள்
நிலவுபெருங் காப்பியங்கள் உரைச்செய் யுட்கள்
நெடுங்கதைகள் சிறுகதைகள் பலவாம் நூல்கள்
உலவுபொருட் கட்டுரைகள் வறுமை யின்றி
ஒளிர்வதனைக் காணுகின்றேன் மேடைப் பேச்சில்,
மலிவுவிலைப் பதிப்பில்,திரைப் படத்தில், கூத்து
மன்றத்தில், நாடகத்தில் எல்லாம் முப்பால்

சிறப்பதனைக் காணுகின்றேன் என்செல் வத்தால்
செயல்புரியீர் எனினும்உரை பற்றிச் சிந்தை
உறைப்போடு மிளிர்கின்றீர்; அதனல் சற்றே
உவகையும்யான் பெறுகின்றேன், அருமை மக்காள்!
அறப்புகழ்சேர் என்பொருளை இனியே னும்நீர்
அனுபவித்துப் பிறவியின்நற் பயனைக் கொள்வீர்!
இறப்பில்லா வாழ்வுறுவீர்!'' என்ருர் தந்தை.
இயம்பியதை அப்படியே இயம்பி விட்டேன்,

ஊனுடம்பீந் தழிபொருளை வருந்தித் தந்திங்(கு)
உடல்தோறும் வேறும்தந் தையர்போ லன்றி
மானுடப்பண் பறிவுடலீந் தறச்செல் வத்தை
மன்பதைக்கே வழங்கியுள தந்தை யாகி
வானுரையால் கல்வெட்டி நமக் களித்த
வாலறிவன் வள்ளுவர்சீர் முழுதும் சொல்ல
யானறிவேன்? சிறிதறிந்த வாறு ரைத்தேன்
ஞானஒளிப் போதகர்சீர் நாளும் வாழ்க!

**நன்றியுரை:**

பொய்யிலாப் புலமை யாலே புவிக்கெலாம் தந்தை யான
அய்யனைப் பற்றி யீங்கே அருந்தமிழ்க் கவிதை கூறச்
செய்தநல் லன்பர் மன்றத் தலைவர்செம் புலவர் சான்றோர்
மெய்யன்பர்க் கெல்லாம் அன்பு மிக்கபல் வணக்கம்
நன்றி.

ஆல வாயிடை அறிவர் வள்ளுவர்
நூலு லாவிடும் நுண்மை பற்றியென்
தால சைந்திடச் செய்த தாய்கயல்
போலுங் கண்ணிபொற் கழல்கள் போற்றியே!

*18—1—70இல், தமிழ்ச் சங்கச் சார்பில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் பாடப்பெற்ற கவியரங்கப் பாடல்கள்*

# வள்ளுவர் எம் ஆசிரியர்


பண்டித அ. முத்துசாமிப் புலவர்

*தலைமைத் தமிழாசிரியர்,*

*தூயமரியன்னை உயர் பள்ளி, மதுரை.*


## அறுசீர்விருத்தம்

மாமதுரைத் திருநகரில் வள்ளுவர் தங் கழகத்தில் மாண்புமிக்க
தேமதுரத் தமிழ்க்கவிஞர் முடியரசன் தலைமையிற் செழுமைசான்ற
காமருசெந் தமிழ்மொழியில் ஆசிரியர் எனும்தலைப்பிற் கவிதைபாட
நாமகளாயிலங்குகின்ற கலைமகளே நின்னருளை நல்குவாயே.

ஆசிரியரெனப்படுவோர் யாரென்றால் மக்களிடம் அமைந்த மாசை
ஓர்சிறிதும் இல்லாமல் ஒழித்தவருக் கறிவொளியை ஊட்டுவோராம்
காசினியில் அப்பணியைப் பயன்கருதாக் கடமையெனக் கருதிச் செய்த
மாசிரியும் ஆசிரியர் வள்ளுவரே எனில் அதனை மறுப்பார் யாரே.

தெள்ளத் தெளிந்த அறிவுருவாய்த் திகழும் இறைவன் திருவடியைக்
கள்ளங் கபடம் இலாதுதொழக் கல்லார் பலநூல் கற்றாலும்
எள்ளத்தனையும் பயனடையார் என்றே யுரைத்த ஆசிரியர்
விள்ளற் கரிய புலமையினில் விஞ்சி நிற்கும் வள்ளுவரே.

கற்கத் தகுநூல் அத்தனையும் கசடில்லாமல் கற்ற பின்னர்
ஒற்கம் இன்றி அருபுகலும் ஒழுக்க நெறியில் நிற்களன
எற்கும் பிறர்க்கும் நயம்படவே எடுத்துச்சொன்ன ஆசிரியர்
நிற்கும் புகழைப் படைத்துலகோர் நெஞ்சிற் குடிகொள் வள்ளுவரே.

மிக்க பலநூல் கற்றாலும் மேலாப் புலமை பெற்றாலும்
ஒக்கப் பலரும் போற்றுகின்ற உயர்வாம் பதவி யுற்றாலும்
மக்கட் பண்பை இழந்தவர்கள் மரமே போல்வர் என்றிழிந்துத்
தக்கபடிசொல் ஆசிரியர் தரணி புகழும் வள்ளுவரே.

அருளில் லாதார்க் கவ்வுலகம் இல்லை அதுபோல் அளவிறந்த
பொருளில் லாதார்க் கிவ்வுலகம் இல்லை யதனால் பொருள் திரட்டி
இருளைப் போக்கும் கதிரவன்போல் இணையில் லாமல் வாழ்கஎனத்
தெருள உரைத்த ஆசிரியர் செந்நாப் போதார் வள்ளுவரே,

செல்வப் பெருக்கில் திளைக்குங்காற் சிறிதும் செழுக்குக்கொள்ளாமல்
எல்லாருக்கும் பணிவாக எளியமுறையில் நடந்திடுக.
அல்லல்கொடுக்கும் வறுமையினில் ஆர்க்கும் பணியாதுயர்கஎன
நல்லபடிசொல் ஆசிரியர் நாவீறுடைய வள்ளுவரே.

எந்தக் கருத்தை எவர்கூறினாலும் உடனே ஏற்காமல்
அந்தக் கருத்தின் உண்மையினை அறிந்தே ஏற்றல் அறிவாமென்(று)
இந்தக் கருத்தை எல்லாரும் ஏற்கும் படிசொல் ஆசிரியர்
சந்தத் தமிழ்த்தாய் தவத்துதித்த சான்றோராய வள்ளுவரே.

அடுத்துத் துன்பம் பலவருங்கால் அலறித் துடித்துப் படுக்கையினிற்
படுத்துப் புரண்டு பொருமியுளம் பதைக்கும் மாந்தர் தமைநோக்கி
இடுக்கண் வருங்கால்நகுக அதுஇன்னல் துடைக்கும் மருந்தாமென்(று)
எடுத்துச் சொன்ன ஆசிரியர் இணையில் திருவள் ளுவராமே.

தன்னை யீன்ற தாய்பசியால் தளர்ந்து மயங்கி வீழ்வதைக்கண்
முன்னே காணும் வறுமையிலும் மூத்தோர் பழித்துக் கூறுகின்ற
அன்ன செயலைச் செய்தேனும் அவளைக் காக்க நினையற்க
என்ன வுரைத்த ஆசிரியர் எவரென்றால் நம் வள்ளுவரே.

மானம் பெரிதென் றெண்ணாமல் வயிறே பெரிதென் றெண்ணி மிக
ஈனம்புரிவோர் இருத்தலினும் இறத்தல் மேலாம் ஈங்கிதனைக்
கானம்பயிலும் கவரியிடம் கண்டுதெளிக என்றுரைத்த
ஞானம்பொலியும் ஆசிரியர் ஞாலம் புகழும் வள்ளுவரே.

இன்னவாறு வள்ளுவனார் இயம்பும் இணையில் கருத்துகளைப்
பொன்னை பணியைப் பெறற்கரிய பொருளைப்போலப் போற்றி அவர்
சொன்னபடியே வாழ்க்கையினிற் சோர்வில்லாமல் கடைப்பிடிப்போர்
என்னகுறையும் இலாதுலகில் இன்ப மாக வாழ்குவனே.

வாழிதிரு வள்ளுவனார்; வாழி திருக்குறள்நூல்;
வாழிஅவர் நன்கு வகுத்தவழி — வாழியரோ
அவ்வழியைப் பின்பற்றி ஆர்வமுடன் செல்பவர்கள்
எவ்வழியும் இன்றி இனிது.

18—1—70இல், தமிழ்ச் சங்கச் சார்பில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் பாடப்பெற்ற கவியரங்கப் பாடல்கள்

# வள்ளுவர் எம் தெய்வம்

பண்டித மு. முத்துவேங்கடாசலம்,

*தமிழாசிரியர், பள்ளத்தூர்.*

பொங்கு தமிழ் தவழ்கூடல் நகரிற் செல்வப்
புரவலன்பாண் டித்துரைமுன் புகழக் கண்ட
சங்கத்தின் சார்பினிலே கோயில் தன்னிற்
சார்ந்த திருவள்ளுவனார் கழகந் தன்னிற்
றங்கிடும் ஈராயிரமாம் வருட முற்றுந்
தனிவிழாக்கவி யரங்கத் தலைமை தாங்கும்
எங்கள்கவி யரசன் முடியரசன் ஏனை
இயற்கவிஞர் அவையினர்க்கு வணக்கஞ் செய்தேன்,

பன்னிற மாலையை யொப்ப வள்ளுவத்தின்
பல்துறைப் பா மாலை தனைப்பிரிவி னோடு
நன்மாலையா எடுத்துச் சொல்வார் அன்பர்;
நற்றமிழின் சுவை தேற நானுஞ் சொல்வேன்;
சொன் மாலையால் மனித குலத்து நீதி
துலக்கியதெய் வத்தினடி தொழுது நிற்பேன்;
என்மாலை யறிந்திங்கே வந்து நின்றே
எனைக் கலப்பான் வள்ளுவனும் இறைவன் கண்டீர்.

என் னுள்ளத் தாமரையில் இருந்தருளுந் தெய்வம்
எழுத்துக்கள் தமக்கு முதல் அகரமென்ற தெய்வம்
மன் னுமுல குக்குமுதல் பகவன் என்ற தெய்வம்
வாயு றைவாழ்த் துலகிற்கு வழங்கியருள் தெய்வம்
உன்னஉன்ன உள்ளமதை உருக்கிடும்எம் தெய்வம்
ஓத எளிதா யுணர்தற்கரிதாகுந் தெய்வம்
நன்னிலையிற் செம்பொருளாய் நமக்கருளுந் தெய்வம்
நாடு திரு வள்ளுவராம் தெய்வமதே தெய்வம்

பொருள் எல்லா வற்றுள் உயிர் சிறந்த தேனும்
பொருந்தும் ஒழுக்கம் போலச் சிறப்புத் தாராப்
பொருள் விளக்கி 'உயிரினும் ஓம்புக்' என்றிட்ட
புலவர்பிரான் அருள்தவழும் புனிதத் தெய்வம்
ஒருவன் இன்னு புரிந்திடினும் இனிய செய்க!
உயர் சால்பும் அதுவே என் றுரைத்த தெய்வம்
மருவி உலகத்தொட்ட ஒழுகல் கற்க
மறவற்க என்று சொன்ன வாழ்வுத் தெய்வம்.

உற்றநோய் தனைப்பொறுத்தெவ் வுயிர்க்குந் தன்னால்
உறுகண்ணே ராதபடி உவந்து காக்கும்
நற்றவமே வடிவாய்க் கொல்லாமை காத்து
நனிவாய் மைநெறி நின்று நாளுந் தொண்டு
பெற்றதிரு நாட்டிற்கே பெரிதும் ஆற்றிப்
பிறப்பினல் மக்களெலாஞ் சமமே என்னும்
நற்போதம் அனைவர்க்கும் ஊட்டிக் காத்து
நலம் உயிரிற் கலந்து நிதம் நல்குந் தெய்வம்

"தத்துவங்கள் ஆருறும் தம்மைத்தாம் அறியா;
தகவுடனே ஒன்ருென்ருய் நாடியுணர்ந் தாய்ந்தால்
நித்தியமாய் உற்றறிவாய் நின்ற உண்மை நீயே!
நினைக"என் மெய்ப்பொருளில் நிலைக்கவைத்த தெய்வம்;
'சித்தமதைப் புலனுகர்ச்சி யோக ஞானத்தே
செலுத்திடா தடக்கிடுக" என்றுரைத்த தெய்வம்
சுத்த அறிவொன் றதுவே துலங்கு பரம்பொருளாம்
தூய ஆனந்தவெள்ளத் தழுந்திடென்ற தெய்வம்

மன்னவன் இராமன் முன்னுள் வந்தவ தரித் தறத்தை
இன்னதென் றொழுகிக்காட்டி இத்தரைத் தெய்வம் ஆனன்;
அன்னதே போன்று கண்ணன் அருச்சுனற் குபதேசித்து
மன்னிய சோகம்நீக்கி வடபுலத் தெய்வம் ஆனன்;

உலகினில் வாழுமக்கள் ஒழுகலா றுணர்ந்து தேறச்
சிலவகை எழுத்தினுள்ளே செறித்துப் பல்பொருள் விளக்கிப்
பலவகைச் சுவை துளும்பப் பகர்ந்த மாதானு பங்கி
உலகினில் தெய்வமாகி ஒளிர்கின்றுன் உணர்மினீரே.

மன்னிய பாரதத்தின் வடதிசை மதுரை தன்னில்
பின்னைதோள் மணந்த ஆயன் பேசுறுந் தெய்வம் ஆனான்;
தென்னவன் தமிழ்த்திளைக்குந் தென்றிசை மதுரைதன்னில்
என்னருந் தெய்வமாக இனிய வள்ளுவனார் நின்றார்.

ஏலவே தனைவைதாரை இன்புற வாழவைக்கும்
கோலமா மயிலின்வீரன் குளிர்தமிழ்த் தெய்வம் ஆனான்;
நூலதில் எழுத்துச்சீர் சொல் பொருள் யாப்பு வனப்பு உண்ணம்
சாலவும் இயம்பியாண்ட தமிழ்த்தெய்வம் புலவர் அம்மா!

எண்ணூறு கிழவன் வேதா படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணு நான்முகத்தாற் கண்டான் நன்று இவன் தெய்வமாமோ?
அண்ணல் எம் செந்நாப்போதார் அறம் பொருள் இன்பம் அன்பு
புண்ணிய அருளுங் காட்டிப் பொலிகின்ற தெய்வம் அன்றோ?

அறம் பொருளின்பம் வீடாய் அமைந்திடு பொருள்கள் நான்கின்
திறமது தெரிந்து கூறுந் தேவனை மனிதன் ஆக்கி
மறந்தும் வள்ளுவன் என்பான்ஓர் பேதையென் றுரைத்தார் முன்னாள்
சிறந்த மாமூலர் என்றால் கண்கண்ட தெய்வம் அன்றோ?

குடிமைநன் மானங்கண்டேன் பெருமைசான் றாண்மைகண்டேன்
மடியின்மை கண்டேன் பண்பு மகிழ்நடம் புரியக்கண்டேன்
முடிவிலா ஆற்றல்கண்டேன் முற்றிய உணர்வுகண்டேன்
படியும் பேரருளுங்கண்டேன் பகர்தெய்வ வடிவம் ஈதால்

மனைவிடாதவ னாகிலும்அரு மகவிடாதவன் ஆகிலும்
தனம்விடாதவன் ஆகிலும் நில புலம்விடாதவன் ஆகிலும்
வினைவிடாதவன் ஆகிலும்மிகு மருள்விடாதவன் ஆகிலும்
உனைவிடாதவன் ஆகில்ஒளி பெறும் உற்றவள்ளுவ தேவனே!

பொன் நினைப்பேன் புகழ்நினைப்பேன் பூமி பெறநினைப்பேன்
பூண்நினைப்பேன் ஊண் நினைப்பேன் பூவையரை நினைப்பேன்
மன்னனென வரநினைப்பேன் மற்றவர்க்குத் தீது
வரநினைப்பேன் பழிமறைக்கும் வழியதனை நினைப்பேன்

இல்நினைப்பேன் நெல்நினைப்பேன் எதையேனும் நினைப்பேன்
இனியநினை நினைத்திடேன் இதனையெலாம் பொறுத்து
நின்னருமைக் குறள்மொழியே நினைத்திட நீஅருளாய்!
நீடுமுதற் பாவலனாய் நின்ற பெருமானே!

வாழவகை யறியாது மயங்குறு மனமே!
மேவி மேவித் துயரில் வீழ்வாய்
எத்தனை கூறியும் என்சொற் கேளாய்
பாவி நெஞ்சே! பாரினில் நின்னை
இன்புறச் செய்வேன் எதற்கும் அஞ்சிடேல்
வள்ளுவத் தெய்வ மலரடி இறைஞ்சிடு.
"வையத்துள் வாழ்வாங்கு வாழ முயன்றிடு
யான் எனதென்னுஞ் செருக்கை யகற்றிடு
கல்லா ரைத்திரு கடிதிற் கெடுக்கும்
நுணங்கு கேள்வியரே வணங்கு வாயினரால்
சென்ற இடத்தாற் செல்ல விடாது
நன்றில் உய்ப்பதே நல்லறி வுணர்க!
சுற்றந்தழுவல் திருப் பெற்றதன் பயனே
ஈக என்றும் இசைபட வாழ்க
பகுத் துண்டென்றும் பல்லுயிர் ஓம்புக!
உள்ளத் தனைய துயர்வென ஓர்க!
மடியிலான் தாளில் மலர்மகள் உறைவாள்
இடும்பை இயல்பெனில் என்றும் துன்புறுன்
பிறர்பழி தம்பழி ஒப்ப நாண் கொள்க
வினையால் மற்றொரு வினையாக்கிக்கொள்
உழுது பயிரிட்டு உன்குடி உயர்த்திடு
தாள் தந்தகூழே தக்கபே ரமிழ்தம்"
என்று வள்ளுவத் தெய்வம் எழுப்பிய
அருள் நாதத்தில் அன்புடன் திளைத்து
வாழ்வு நடாத்தி வளம் நீ பெறுகவே

தேனும் பாலும் கன்னலும்போல் தெவிட்டாச் சுவைகொள் தீந்தமிழில்
நானும் பாட வல்லன் என நாடு புகழப் பாடுகிலேன்
வானும் புகழும் குறள் அடியால் வையத்தினர் உள்ளுவ எல்லாம்
கோனுய் அளந்த தேவே! நின் குணமே பாடுங் குறிப்புடையேன்
கதிகாட்டும் நூல் இதுவோ அதுவோ எனக் கற்றும் நுங்கள்
மதிகாட்டும் பல்வழிச் சென்றுழல் வீர்! நம் மனத்தின் இருள்
பதியோட்டும் இன்பப் பயன் காட்டும் என்றும் பழ வினையாம்
விதியோட்டும் கூட்டும் ஒளி வள்ளுவர் குறள் மேன்மையிதே.

பாட்டுத் தலைவன் திருவள்ளுவன் தெய்வப்பண்பு
பாட்டில் குறி ஏறிய எல்லை பகர்ந்தேன் அல்லேன்
வாட்ட மொழிக்கும் அவர் தம்திரு வாரிசத்தாள்
காட்டு நெறியான் அறிநேர்மை கழறினேனுல்

# தமட்டை

புலவர் இரா. சுப்பிரமணியன்
தமிழாசிரியர், காஞ்சி.

ஊரார் மாட்டு மந்தையில் திரியும் காளையைத் 'தமட்டை' என்று இன்றும் பல மாவட்டங்களில் வழங்கி வருகின்றனர். தமட்டை என்ற சொல் எப்படி வந்தது என்பதை ஆய்ந்து இன்புற வேண்டாமா? தம்+பாட்டை, தம்முடைய பாட்டை, அதாவது தாம் போகின்ற வழி பாதை, என்பதாகும். பாட்டை=பாதை. 'வழியே செல்க' என்பார் 'பாட்டை பார்த்துச்செல்க', என்று கூறும் வழக்கம்உண்டு காட்டுவழி ஏகுவார் வழிதடுமாற்றம் ஏற்படுங்கால் பாட்டை தவறி விட்டதுஎன்று கூறுவர், தாம் போன வழியே போகும் மாட்டையும் தமட்டை மாடு என்னும் பொருளில் தமட்டை என்று வழங்குகின்றனர். ஊரார் மாடுகளுக்குத் தொழுவமும் தொட்டியும் உண்டு. கட்டிவைத்துக் காப்பாற்றி வேலை வாங்குவார். பிறர் பயிரையோ வைக்கோற் போரையோ சென்று மேய்ந்தால் கேள்விக்கு இடமுண்டு. ஆனால் ஊரார் மாட்டு மந்தையில் திரியும் காளையோ எவர்க்கும் அடங்காது. தான் விரும்பிய பயிரையோ, வைக்கோல் போரையோ, சென்று மேயும். அவர்கள் கொடுக்கும் அடி, உதை, குத்து எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ளும். அதற்கு உண்ண, உறங்க சொந்த இடமில்லை, இரவும், பகலும் திரிந்தே தின்று கொழுத்துத் திரியும், அப்படிப் பட்ட மாட்டை, தமட்டைமாடு என்றும், தமட்டை என்றும் வழங்கு கின்றனர். தாய் தந்தையார் சொற்கேளாமல், பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றாமல், ஊருக்கு அடங்காமல் தான் மட்டும் உண்டு கொழுத் துத்தாம்போன போக்கில் திரிபவனைத் 'தமட்டைபோலத் திரிகின்றான் பார்!'' என்று இன்றும் கூறுகின்றனர். தம்+பாட்டை+மாடு என் பதே 'தமட்டை' ஆயிற்று!

# பால பாரதி

## மு அருணாசலம், திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ், தமிழ்நாடெங்கும் உள்ள மக்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டிருக்கிறது. கவிஞர் பெருமக்களும் காலந்தோறும் அதனுடைய சொற் சுவையிலும் பொருட்சுவையிலும் சந்தச் சுவையிலும் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள், திருப்புகழைப் பின்பற்றி முருகன் புகழ்களாகவும் பிறவகையிலும் பாடிய தனிப் பாடல்களும் தோத்திரப் பாடல்களும் மிகப் பல. குரவை இராமனுசதாசர் என்பவர் பாடிய 'நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்' என்பது இவ்வகை நூலில் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இது, திருமால் கோயில் கொண்டுள்ள தலங்கள்தோறும் ஒவ்வொரு திருப்புகழ் வீதம் பாடப்பெற்ற 108 பாடல்களைக்கொண்டது. அன்றியும், சமீப காலத்தில் அழகுமுத்துப் புலவர் என்பவர் திறப்புகழ் என்ற ஒரு நூலும் பாடியிருக்கிறார். இது திருப்புகழ் போன்ற சந்தப் பாடல்களை உடையது. இவ்வாறெழுந்த நூல் வரிசையில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பான நூல், 'இராமாயணத் திருப்புகழ்' ஆகும்; இதற்கு 'இராம செயத்திருப்புகழ்' என்ற பெயரும் வழங்கும்.

இராம சரிதம் முழுமையும் இதனுள் கூறப்படுவதால், இராமாயணத் திருப்புழ் எனப்படுவதாயிற்று. "நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு ஒழிய வாகை சூடிய சிலை இராமபிரான் தோள்வலி கூற" எழுந்ததாகலின், 'இராமசெயம்' என்ற பெயரும் இதற்குப் பொருந்தும், புகழாவது கொடையும் அறிவும் ஆண்மையும் ஆம்; இறைவனிடத்திலே இம்மூன்றும் ஒருங்கே அமைந்திருத்தலால், இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடல், திருப்புகழாயிற்று.

இந்த நூலானது கம்ப ராமாயணத்தைத் தழுவி இயற்றப்பட்டது. இதனை,

> "துற்றபுகழ் கொண்டு பாரதி
> யப்பனுனை நெஞ்சிலே கொடு
> சுத்தகவி கம்பநாடன் — இனி தோதும்
> சொற்படி விளம்பும் ராம செயத்தினை-"

என்னும் இந்நூலின் யுத்த காண்டத்து 97-ஆம் செய்யுளால் அறியலாம். இவர், ஒவ்வொரு பாட்டிலும் இராம சரித்திரம் முறையாகத் தொடர்ந்து வரும்படி அமைத்து அச்சரித்திரத்தோடு பொருந்துமாறு

'பெருமாளே' என இராமனையே விளித்து முன்னிலையாக்கிக்கொண்டு பாடுகிறார். அருணகிரிநாதர் திருப்புகழில் அமைத்துள்ளமைபோல, முதல் பாதியில் தம் குறையை விண்ணப்பித்து அதைத் தீர்த்தருளு மாறு வேண்டுகிறார். பிற்பாதியில் சரித்திரத்தைச் சொல்லி, "இந்த வரலாறுடைய பெருமாளே" என்று பாடுகிறார். இவர் அருணகிரிநாதர் நூலை நன்கு பயின்ற காரணத்தால், இந்த நூலும் மிகுந்த சுவை யுடையதாய்ச் சந்தத்தினால் சொல்நயம் கெடாதபடி அழகாக அமைக் கப்பட்டிருக்கிறது.

இது கம்ப ராமாயணம் போல ஏழு காண்டமாக உள்ளது. காண் டத்தின் செய்யுட்கள் முறையே 58, 44, 37, 52, 100, 65 ஆகும்; இவை கோபால நாயுடுவால் அச்சிடப்பெற்றன. பின்னர் 1918-இல் முதல் இரு காண்டங்கள் வேலு முதலியார் உரையோடு வெளியிடப்பெற்றன. பின்னர்ப் பாலகாண்ட மட்டும் அரிசமயதிவாகரம் பிரசுரமாக வெளியா யிற்று. யுத்தகாண்டமும் உத்தர காண்டமும் (1937-38இல்) செந்தமிழ் தொகுதி 36, 37இல் உதவிப் பத்திராசிரியர் திரு. இராமனுச ஐயங்கார் அவர்களால் ஆய்ந்து வெளியிடப்பட்டன. இவ்வாறு வெளியான பகுதி களை ஆராய்ந்து, ஆசிரியரைக் குறித்தும் இவர் காலத்தைக் குறித்தும் சில சொற்கள் இங்கே சொல்லலாம்.

தொடக்கத்தில் காட்டிய யுத்த காண்டப் பாடலால் இந்நூலின் பெயர் இராமசெயம் என்றும், இதைச் செய்தவர் பாரதி என்றும் நாம் அறிகிறோம். இப்பாடலைப் பதிப்பித்தவர், பாரதியப்பன் என்று இயற் பெயர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியின்றிப் பாரதி என்பது மட்டுமே பெயர் என்று கொண்டு, "அப்பனாகிய உன்னை நெஞ்சிலே கொண்டு" என்று அப்பாடலிலே வரும் தொடரைப் பிரித்துப் பொருள் பண்ணிக் கொள்ளவும் இடமுண்டு; முன்னே காட்டிய மேற்கோள் பகுதியைக் காண்க. இதைப் பாயிரம் இரண்டாம் பாடலில் வருகிற தொடரும் உறுதிசெய்யும். "பாரதி நெஞ்சால் உணர்ந்து—மேல் வரும் என்றே தெளிந்து பாடிய நன்காதை" என்று அனுமான் காப்புப் பாடலில் கூறி யிருப்பது காண்க. மேலும், "இவர் பெயர் 'பால பாரதி' என்று ஒரு சீட்டுக் கவியினால் விளங்குகிறது" என்று, உரை செய்த வேலுமுதலி யார் குறிப்பிட்டிருக்கிறார்.

செந்தமிழ்ப் பத்திரிகை, "இவ்வாசிரியர் காலம் முதலியன விளங்க வில்லை" யென்று குறிப்பிடுகிறது. எனினும் இவர் செய்த ஒரு சிறப்புப் பாயிரத்தால் இவர் காலம் தெளிவாகிறது. தில்லை விடங்கன் மாரிமுத்

தாப்பிள்ளை என்பவர் 'புலியூர் வெண்பா' என்ற நூல் செய்திருக்தார். இது மிகவும் சிறப்பான ஒரு பிற்காலச் சிற்றிலக்கியம். பண்டிதர்கள் இதைப் பெரிதும் பாராட்டிப் பயின்று வந்தார்கள். மாரிமுத்தாப்பிள்ளையைச் சிறப்பித்துப் 'பாலபாரதி' ஒரு பாடல் பாடியிருக்கிருர். பாடலை அச்சிட்ட நூலாசிரியரின் வழிவந்த வேலுசாமி பிள்ளை, "இந்நூலாசிரியர் காலத்திருந்த வித்துவான் பாலபாரதியார்" என்று குறிப்பிட்டிருக்கிருர். அப்பாடல் பின் வருமாறு:-

"தில்லை விடங்கன் தனில்வாழும்
தெய்வப் பெருமாள் திருப்புதல்வன்
தெளிந்த மனத்தன் முத்தமிழோர்
தினமும் புகழுங் குறுமுனிவன்

முல்லை நகையார் மதன் மாரி
முத்துப் புலமைத் திறம் போல
முயன்ற சுகுமண மதுபோல
முழுதுந் தெளிந்த மனம் போல

எல்லை யிகந்த பாரதலம்
எழில்வான் தனிலு மேகாண
இதயத் தெண்ணி விழிதுயிலா
திருந்து மதுவே நினைவாகி

எல்லையரன் மாலயன் பிச்சைக்
குழன்றும் பன்றிவடி வெடுத்தும்
ஓங்கிப்பறக்கு மோதிமமா
உயர்ந்துந் திரிந்துங் காணுரே."

தில்லை விடங்கன் மாரிமுத்துப் பிள்ளை, பிரசித்தமான இந்தப் புலியூர் வெண்பாவும், சில இசைப் பதங்களும் வேறு பிரபந்தங்களும் பாடியவர்; இவர் காலம் கி. பி. 1787ஐச் சேர்ந்தது. சீர்காழி அருணாசலக் கவிராயரும், முத்துத் தாண்டவரும், மாரிமுத்தாப் பிள்ளையும் சமகாலத்தினர். இவர்கள் காலம் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். இக்காலமே 'இராம செயத் திருப்புகழ்' செய்த பாலபாரதியின் காலமும் ஆகும் என்பது விளங்கும்.

இவரது ஊர் திருவரங்கமாகலாம்; அல்லது திருவரங்கத்தில் இவர் வாழ்ந்திருந்தாரென்று கருத வேண்டும். பின்வரும் பகுதிகள் சான்றாக

உள்ளன. சீதையை மணமுடித்துத் தேரில் வருகின்ற இராமபிரானின் மணக் கோலத்தைப் பின்வருமாறு கூறுகின்றார். (பாலகாண்டம் 52).

“ கொந்தார் புரிகுழல் வரிவிழி நீலச்
சந்த்ரா னனசன கியை யொரு தேரிற்
கொண்டே வருமழகிய மணவாளப் பெருமாளே”

பின்னர் யுத்த காண்டம் 9ஆம் பாடலில் பின்வருமாறு கூறுகிறார்.

“ சுருதி முடிந்த பொருள தென்பர்
அருள்வ டிவென்ப ரறிவதென்பர்
சுடர் மயமென்ப ரருவமென்பர்—அவரோதுஞ்
செலவு பொருந்த விரகினின்று
மருவி யவுன்ற னளவு கண்டு
தொழுது பணிந்து திருவரங்கம்—மறவேனே”

மற்றொரு பாடலில் (யுத்த காண்டம் 23) தாம் திருவரங்கத்தில் உறைகின்ற வழியடிமை என்றே கூறுகிறார்.

“ அருள் மறைகள் பரவரிய திருவரங் கமதுறையும்
உனது வழி யடிமைவென வனுதினங் கவலையற
அசதியற மனமுருகி நினைவுறுந் தவநெறிகள் பெறுவேனோ”

திருவரங்கத்துத் திருமால் திருநாமம் ‘அழகிய மணவாளன்’ என்பது. அவனிடம் பூண்ட அடிமைத் திறத்தினாலேயே இவர் அழகிய மணவாளப் பெருமாள் என்று இங்குக் கூறுகிறார் என்று, இதை நாம் கருதுதல் பொருந்தும்.

சில பாடல்களில் இவர் திருமால் பதிகள் அனைத்தையும் தொகுத்துச் சொல்லுகிறார். (பாலகாண்டம் 22, 38, 50) இங்குக் கூறப்பெற்ற தலங்கள் அறுபது ஆகும்.

மற்றொரு செய்தி சிறப்பாய் அறியத்தக்கது. அருணகிரிநாதருடைய திருப்புகழின் அரிய கருத்துக்கள் அப்படியே இங்கு எடுத்து, ஆளப்பெற்றுள்ளன. முன் கூறிய ‘சுருதிவளர்’ என்கின்ற வரிகள் உதாரணம். அது மட்டுமன்றி, அவருடைய பாடல்கள் இரண்டினை முழுமையாக அப்படியே எடுத்துத் தம்நூலில் இவர் பெய்து கொண்டிருக்கிறார். ‘கருவடைந்து பத்துற்ற திங்கள்’ என்ற அருணகிரிநாதர் பாடல், நீண்ட நான்கு இரட்டை வரிகள் கொண்டது. இவற்றுள் மூன்றரை அடி

அல்லது ஏழு வரிகளை இந்தப் பாரதியார் அப்படியே எடுத்துவைத்து ஆள்கின்றார். அதுபோலவே பதினெட்டாம் செய்யுளில் "தொந்திசரிய மயிரே" என்ற அருணகிரிநாதர் பாடலிலிருந்து ஆறுவரிகளை முழுமையும் எடுத்து ஆள்கிறார். இன்னும் பல இருத்தலும் கூடும்.

கோவை உலா முதலிய பிரபந்தங்களையும் தொல்காப்பியத்தையும் குறிப்பிடுகின்றார் இவர். தொனியால், பெரிய புராணத்தையும் குறிப்பிடுகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால், பாலபாரதி என்பவர், அருணகிரிநாதர் வழியில், இராமன் புகழைப் பாடினவர் என்பதும், இவரது காலம் சுமார் 1750ஐ ஒட்டியதாயிருக்கலாம் என்பதும் அறியலாம்.

[பாலபாரதி என்பது, பிற்காலத்தில் பலர் புனைந்துகொண்ட பெயர். பவானி கூடலில் பிறந்த ஒரு கவிஞர் பாலபாரதி எனப் பெற்றார். அவர் மரபில் மற்றொருவர்-பாலபாரதி முத்துசாமி ஐயர் பாம்பண்ண கவுண்டன், குறவஞ்சி பாடினார்.]

---

18—1—70 இல், தமிழ்ச் சங்கச் சார்பில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் பாடப்பெற்ற கவியரங்கப் பாடல்கள்

# வள்ளுவர் எம் தோழர்

கவிஞர் கதி. சுந்தரம், தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

திசையதனைத் தெய்வத்தை மதியதனைச் சுடர்க்கதிரைச் செம்மை மிக்க
இசைபெருகும் அறம்அதனை நற்காற்றை மாவிசும்பைப் பயிரைக் காட்டி
அசைகின்ற நிலமகளைத் தமிழ்த்தாயைத் தமிழகத்தை வணங்கி நின்றே
இசைபெருகு பாவழங்க வந்துள்ளேன் ஏற்றருள்வீர் பொறுமை கொள்வீர்!

கொடியரசர் எல்லோரும் கும்பிட்டுப் போய்விட்டார் ஆனல் காரைக்
குடியரசே! மணிமகுடம் கொண்டுள்ளீர்! நல்லகவி ஆட்சி செய்யும்
முடியரசாய்த் திகழ்கின்றீர்! முதன்மைமிகு பாவரசே! என்றும் நும்சொற்
படிகேட்கும் சிறியேன்யான் படைக்கின்ற கவிப்பொருளைப் பாங்காய் ஏற்பீர்!

மாமதுரைச் சான்றோரே! மாண்புமிகு பெரியோரே! மற்றும் உள்ள
தேமதுரத் தமிழ்ப்புலவீர்! திக்கெட்டும் வள்ளுவரின் சிறப்பைப் போற்றும்
ஆம்மதுரை வள்ளுவரின் அருங்கழகப் பெருமக்காள்! வணக்கம். நன்றி
பாமதுரைத் தமிழ்ச்சங்கப் பணிபோற்றி எம்பாவைப் படைக்கின்றேமால்

எம்தெய்வம் எம்ஆசான் எம்அமைச்சர் வள்ளுவனர் என்ற போதும்
அம்மையெனத் தந்தையென அழகாகப் பாப்புனைந்து நின்ற போதும்
இம்மையிலே மறுமையிலே என்றென்றும் தோழரென இயம்பு தற்கே
முன்பிறவித் தவம்வேண்டும் முன்னவனின் அருள்வேண்டும் முற்றும் வேண்டும்

எத்தனையோ பேறுபல எய்திமிக வாழ்ந்தாலும் ஆழ்ந்து நோக்கிப்
முத்தமிழின் பாவலரை முன்னவரை வள்ளுவரை மகிழ்ந்தே என்றும்
தித்திக்கும் தோழரெனச் செய்கின்ற பேற்றைப்போல் பேறும் இல்லை
இத்தரையில் தோழர்யாம் பெற்றிட்ட பேறெண்ணி இனிமை காண்பேம்

வாழ்க்கையெனும் பெருங்கடலுள் வளர் துன்பப் பேரலைகள் மோதும் போதும்
தாழ்ச்சிதரு வறுமையெனும் புயற்காற்றுப் பயங்கரமாய் தாக்கும் போதும்
வீழ்ச்சிதரு சிற்றின்பச் சுறுமீன்கள் கடித்தெம்மை இழுத்த போதும்
வாழ்க்கைநெறி காட்டியெமைக் காக்கின்ற வள்ளுவனர் வாழ்க்கைத் தோழர்

வஞ்சகம்செய் குறுநரிகள் வலைவிரித்தே எமைப்பிடிக்க முயலும் போதும்
கொஞ்சமுமே மனமிரங்காக் கடும்புலிகள் பாய்ந்துமிகக் கொல்லும் போதும்
நஞ்சுநிறை கொடும்பாம்பு படமெடுத்தே எமைக்கொத்த நாடும் போதும்
அஞ்சாத வள்ளுவனார் அருகிருந்தே எமைக்காப்பார் அருமைத் தோழர்

கலைசொல்வார் கவிசொல்வார் புவிசொல்வார் கனிசொல்வார் கனிவாய்ச்சொல்வார்
மலைசொல்வார் கடல்சொல்வார் மலர்சொல்வார் மணம்சொல்வார் மகிழ்வாய்ச் சொல்வார்
நிலைசொல்வார் நிறைசொல்வார் நெடிதிங்கே யாம்வாழ நேர்மை சொல்வார்
விலையில்லா மாணிக்கம் எம்தோழர் வள்ளுவனார் தோழர் தோழர்

மக்களுக்குத் துணையாவார் மாபசிக்கு மருந்தாவார் மற்றும் இங்கே
தக்கதொரு பொருளாவார் தாங்குபெருந் தூணாவார் வருந்தும் போது
பக்கத்தே இனிதிருக்கும் பண்புமிகு கருணைநிதிக் கலைஞர் ஆவார்
முக்காலம் அறிந்துரைக்கும் முதல்வரிவர் வள்ளுவனார் முதன்மைத் தோழர்

உடுக்கைதனை இழந்தவனின் கைபோல உதவிடுவார் துன்பம் என்னும்
படுக்கையிலே நாம்சுருண்டு படுத்திருந்தால் எழுப்பிடுவார் தீமை அம்பைத்
தொடுத்திங்கே வாழ்வோரைத் தொடர்ந்தெதிர்த்து வென்றிடுவார் அன்புக் கையால்
எடுத்திடுவார் வளர்த்திடுவார் இனியகுறள் அமுதூட்டி என்றும் காப்பார்

## உலகத்தில் காணும் பொய்யான தோழர்கள்

மெய்யன்பர் போலமிகு மேதினியில் நடிக்கின்ற தோழர் உண்டு
கையுள்ளே ஆயுதத்தை மறைத்துமிகக் கரம்கூப்பும் தோழர் உண்டு
பொய்யான உரைகூறிப் பொருள்பறிக்கும் தோழர்தாம் என்றும் உண்டு
செய்யாத தீமைபுரி தீயோரும் தோழரெனச் செப்பல் உண்டு

கூடாத நட்பதனைக் கொள்ளாதே என்றுரைப்பார் எமது தோழர்
நாடாதே திநட்பை எனநவில்வார் நாடுபுகழ் நல்ல தோழர்
ஆடாதே பொய்ஆட்டம் அழிந்தொழிவாய் எனப்புகல்வர் இடித்துச் சொல்வார்
தேசரிய பெருந்தோழர் வள்ளுவனார் உயிர்த்தோழர் செல்வம் ஆவார்

வள்ளுவரின் நட்பிதுதான் வளர்கின்ற நூல்நயம்போல் வளர்ந்தே ஓங்கும்
தெள்ளமுத வளர்மதியாய்த் திங்கரும்பின் சுவைப்பெருக்காய்த் திகழ்ந்தே ஓங்கும்
உள்ளக்கோப் பெருஞ்சோழர் ஓங்குபிசி ராந்தையர்போல் உயர்ந்தே தோன்றும்
உள்ளத்துள் அறிவொளியை ஏற்றுகின்ற வள்ளுவனார் உண்மைத் தோழர்

கல்விதனைத் தருகின்ற கலைத்தோழர் கற்பகமாம் கவியின் தோழர்
எல்லையிலாப் பேரின்பம் எய்திடவே வழிவகுக்கும் இனியதோழர்
எல்லோரும் போற்றுகின்ற இனியகுறள் வழங்குகின்ற தமிழின் தோழர்
சொல்அளந்து போட்டாலும் சொல்லுக்குள் அடங்காத தூய தோழர்

எப்பொருளை இழந்தாலும் எம்தோழர் வள்ளுவரை இழக்க மாட்டேம்
முப்பாலைப் படைத்திட்ட முதல்தோழர் புகழ்போற்றி மகிழ்ந்து வாழ்வோம்
இப்புவியில் அறமதனைப் பொருளதனை இன்பத்தை விளக்கிச் சொல்லும்
ஒப்பரிய வள்ளுவனார் ஒருதோழர் எம்தோழர் உலகத் தோழர்

---

# இன்றைய இலக்கியம்

சு. சக்திவேல் M. A., M. A.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
&
மானிடவியல் ஆராய்ச்சித்துறை, கல்கத்தா-13.

1-1. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பது நமது மரபு. 'யாதானும் நாடாமால் ஊராமல்' என்கிறது குறள். இத்தகைய பரந்த மனப்பான்மையைக்கொண்ட பண்பாட்டுக் கோயில் தான் நமது தமிழிலக்கியம். 'மக்கள் வாழ்க்கை முறையினை எடுத்துக்காட்டுவதே இலக்கியம்' என்கிறார் மேனாட்டறிஞர் ஹட்சன். 'மக்களுக்கு நல்லறிவு புகட்டும் சிறந்த கருவிகளில் இலக்கியமும் ஒன்று' என்று கூறுகிறார் மார்லி. நமது இலக்கியம் இத்தகைய பண்புகளைக் கொண்டு இலங்குகிறது. மொழிப் பேரறிஞர் ((Linguist) கிரியர்ஸன் கூட 'திராவிட மொழிகளில் தமிழ் மொழியே பண்டைக் காலம் முதல் பயின்று வருவது' என்கிறார். இலக்கியத்தை இயற்கலை இலக்கியம், பொருள் வகை இலக்கியம் என இருவகையாகப் பிரிக்கலாம். இயற்கலை இலக்கியமானது சிறப்பாகக் கற்பனையின் அடிப்படையில் ஆக்கப்பட்ட செய்யுள், பாட்டு. சிறுகதை, புதினம், நாடகம், நாட்டுப் பாடல், கட்டுரை முதலியனவாகும். இதயத்தால் சிறப்படைவது இயற்கலை. அறிவியலைப் பற்றிய அனைத்தும் பொருள்வகை இலக்கியத்தின்பாற்படும்; இஃது அறிவால் சிறப்படைவதாகும். இன்றைய இலக்கியத்தில் இவ்விரண்டு வகைகளும் சிறந்தோங்குவதைக் காண்கிறோம்.

1-2. இலக்கியமும் வரலாறும் நாட்டின் இரு கண்களாகும். எனவே, வரலாற்றுப் பின்னணியில்தான் இலக்கிய வளர்ச்சியை விளக்குதல் வேண்டும். தமிழிலக்கிய வளர்ச்சியானது முன்னைப் பழமைக்கும் பழைமையாய் புதுமைக்கும் புதுமையாய் காலப்போக்கில் இயைந்து கருத்திலே, அமைப்பிலே, செய்யுள் நடையிலே மாறியுள்ளது. அம்மாற்றத்தினை காலக்கண்ணாடி கொண்டுதான் காணவேண்டும்.

2-1. சங்க காலத்தில் அகம், புறம் விளக்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்கள் தோன்றின. சங்க காலத்திற்கு முற்பட்ட மிகப்பழமையான நூல் தொல்காப்பியம் என்பது அறிஞர் பலர் கருத்தாகும். சங்க கால இறுதியில்தான் உலகம் போற்றும் திருக்

குறளை வள்ளுவர் யாத்தார். பின்பு சில நீதிநூல்களும் தோன்றின. பின்பு குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் இளங்கோவால் படைக்கப்பட்டது. இதனை யொட்டி பௌத்த சமயப் பிரச்சாரத்திற்காகச் சீத்தலைச்சாத்தனாரால் மணிமேகலை இயற்றப்பட்டது. இரட்டைக் காப்பியங்கள் என்று இதனைக் கூறுவர். சிலம்பில் ஊழ்வினை வற்புறுத்தப்படுகின்றது. பின்னர் இருண்ட காலமாகிய களப்பிரர் ஆட்சியிலே நீதி நூல்கள் பெருகின. சமய நோக்கும், அறநெறியுமே வற்புறுத்தப்பட்டன. பின்னர்த் தமிழிலக்கியத்தில் புராணக் கற்பனை வளரத் தொடங்குகிறது. சங்க காலத்தில் ஆசிரியப்பா, வெண்பாவே சிறந்து விளங்கிற்று.

3-1 பழங்காலம் சங்க காலமெனின் இடைக்காலம் சமயகாலம் எனலாம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றிய காரணத்தால் பௌத்த, சமண செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் சமணம், பௌத்தம், சைவ, வைணவப் போராட்டம் நிகழ்ந்தன. சமய காலத்தில் விருத்தமே சிறந்து விளங்கியது. கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் தேவாரங்கள் நம்பியாண்டார் நம்பியால் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. ஆழ்வார்களது பாடல்கள் நாதமுனியால் திவ்ய பிரபந்தங்களாகத் தொகுக்கப்பட்டன. பிரபந்தங்களும் பெருங்கதை என்ற காவியமும் எழுந்தன. சிவகசிந்தாமணி, வளையாபதி, குண்டல கேசி இக்காலத்தில் தோன்றின. ஐஞ்சிறு காவியங்களான சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீல கேசி முதலியனவும் இக்காலத்தே தோன்றின. கி. பி. 12-ஆம்நூற்றுண்டில் சேக்கிழார் பெரியபுராணம் பாடினர். கம்ப இராமாயணத்தை இயற்றிய கம்பரும், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற பெரும் புலவர்களும் இக்கால இறுதியில் வாழ்ந்தனர். குணவீரபண்டிதர் 'நேமி நாதம்' எனும் இலக்கண நூலையும், கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பவணந்தி 'நன்னூல்' என்ற இலக்கண நூலையும். புத்தமித்திரனர் 'வீரசோழியம்' என்ற நூலையும் யாத்தனர். இக்காலத்தே இறையனர் களவியலுக்கு உரை எழுதப்பட்டது. இக்காலத்தேதான் மணிப்பிரவாளநடையும் நிகண்டும் உருவாகியன.

4-1 கி. பி. 14 ஆம் நூற்றுண்ண்டிற்குப் பிறகு தமிழகம் விசய நகர வேந்தர் ஆட்சிக்கு உட்பட்டுப் பின்பு நாயக்கர், கருநாடக நவாப் பின் கீழ் இருந்து பின் ஆங்கிலேயர் கைக்கு மாறியது. இக்காலத்தே பெரும்பாலும் சிற்றிலக்கியங்கள்தான் தோன்றின.

5-0 சங்க காலத்திலிருந்து இன்றுவரை ஏற்பட்ட இலக்கிய மாறுதல்கள் வரலாற்றுடனும் அரசியலுடனும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அணுயுகம் - அபோலா யுகம் என்று பேசுகின்ற இக்காலத்திற்கேற்ப இலக்கியமானது பல துறைகளிலும் வளர்ச்சிபெற்று வருகின்றது. அவற்றின் வளர்ச்சியினை முறையாகக் காண்போம்.

## 5-1 உரைநடை (Prose)

இன்றைய இலக்கியத்தில் உரைநடை மிக்க வளர்ச்சியடைந்திருக்கிறது எனின் மிகையாகாது. உரைநடைக்கு வேண்டிய வித்தினைச் சிலம்பிலே காண்கிறோம். சிலப்பதிகாரத்தை உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகக் காண்கிறோம். நக்கீரனுடைய இறையனார் அகப்பொருளுரைதான் முதல் உரைநடையாகும். ஸ்ரீபுராணமும் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் உரைநடையில்தான் எழுதியுள்ளார்கள். கி. பி 18-ஆம் நூற்றாண்டில் பெசுகி எனும் வீரமாமுனிவர் கிறித்தவ சமயத்தைப் பற்றி உரைநடையிலே எழுதினார். 'அவிவேக பூரண குரு கதை' மூலம் வீரமாமுனிவரை இன்றைய உரைநடையின் தந்தை எனவும் கூறலாம். சமயத்துறையிலே சிவஞான சுவாமிகள் தீட்டிய சிவஞானபோதம், 19-ஆம் நூற்றாண்டில் தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரம் முதலியன குறிப்பிடத் தக்கன. தற்கால இலக்கிய உரைநடைக்கு வழிவகுத்தவர் ஆறுமுக நாவலர் ஆவர். 20-ஆம் நூற்றாண்டில் மறைமலையடிகளும் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களும் நல்லதொரு உரைநடை மரபை ஏற்படுத்தினர். மற்றும் உரைநடை வளர்ச்சியில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, விபுலானந்தஅடிகள், வேங்கடசாமிநாட்டார், சோமசுந்தரபாரதியார், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் இராசமாணிக்கம் பிள்ளை, டாக்டர் அ. சி. செட்டியார், டாக்டர் அகத்தியலிங்கம் ஆகியோரின் பணியும் நடையும் குறிப்பிடத்தக்கவை. தமிழ் உரைநடை வளர்ச்சியில் இராபர்ட் டி. நோபிலின் ஏசுநாதரின் சரித்திரமும், பெசுகியின் பரமார்த்த குரு கதையும் இவண்கண் குறிப்பிடத்தக்கன வாகும். இந்நூற்றாண்டில் உண்மையிலேயே உரைநடை வளர்ச்சி ஈடுஇணையற்றது எனக் கூறலாம்.

## 5-2. புதினங்கள் (Novels)

வேதநாயகம் பிள்ளையவர்களின் பிரதாப முதலியார் சரித்திரம் இன்றும் சிறந்த புதினமாகக் கருதப்படுகின்றது. இப்புதினம் பீல்டிங்கின்

டாம் சோம்ஸ்பை நமக்கு நினைவூட்டி நெஞ்சைவிட்டு அகலாநிற்கிறது. கிராமத்தின் சமூக வாழ்க்கையை விளக்கும் இராசம் அய்யரின் கமலாம் பாள் சரித்திரம், சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தும் மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் முதலியவைகள் குறிப்பிடத்தக்கன. புதின உல கிலே மறுமலர்ச்சி ஏற்படுத்திய கல்கியின் சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் மற்றும் டால்சுடாயின் 'போரும் அமைதியும்' என்ற நூலுடன் ஒப்பிடத்தகுந்த அலை ஓசை முதலியன புதின உல கில் குறிப்பிடத்தக்கனவாகும். அடுத்துப் புதின உலகிலே தனக்கெனத் தனிநடை வகுத்துத் தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்கவர்ந்த பேராசிரி யர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்களின் அகல் விளக்கு சாகித்ய அக டமி பரிசுபெற்ற நாவலாகும். இன்றைய சமுதாயத்தில் சூழ்நிலையால் ஏற்படும் தவற்றுக்குஆளாகி வருங்கால சந்ததியாரைப் பாதிக்கின்ற ஓர் உளப்போராட்டமே 'நெஞ்சில்ஓர் முள்'. அவருடைய புதினங்கள் எழுத் துலகிலே புதுமையும் கருத்திலே புரட்சியும் நடையிலே எளிமையும் உடையனவாகும். அகிலனின் பாவைவிளக்கு பெண்களின்உள்ளத்தைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மனிதனின் உளப்போராட் டங்களைப் பல கோணங்களில் ஆராய்கின்ற புதுமைப்பித்தனின் புதி னங்களும் படித்து இன்புறத்தக்கவையாகும். அதிக புதினங்களைத் தீட்டியவர்கள் குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார், கோதை நாயகி ஆகியோராவர்.

## 5-3 கவிதை (Poetry)

மகாகவி பாரதியார் நாடு அடிமைப்பட்டுக்கிடந்த நேரத்தில் தமி ழர்களைத் தட்டியெழுப்பி வீரக்கனல் பொழிந்தார். சாதிபேதத்தினைச் சாடினுர்; தமிழ் மொழியிலுள்ள சாத்திரங்களெல்லாம் பிறமொழியில் வரவேண்டுமென விரும்பிய கவிஞர் பெருமகன். இந்நூற்றுண்டின் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கிய கவிஞராவர். 'நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் மிக்க கவிஞர். 'நல்ல குடும்பமே பல்கலைக்கழகம்' என்ற தமிழ்ப்பண்பாட்டைத் தரணி உணர்த்துகிருர் 'குடும்பவிளக்கு' பாவேந் தன் பாரதிதாசன். தமிழை உயிர்க்கு உயிராய் நேசித்த பெருமகன். செல்வி கூறியதுபோல் 'கவிதை இயற்கையின் மறுபடைப்பு' என்ப தற்கேற்ப அழகின் சிரிப்புப் போன்றவற்றைப்படைத்தவர். பாண்டியன் பரிசு, தமிழியக்கம் முதலியன அவரது இறவாப் படைப்புக்களாகும். தமிழை உயிராகவே மதித்த பெருமகனர். 'மங்கையாய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்கிருர் கவிமணி. பெண் மைக்கே உயர்வு தேடித் தந்தார். அவர் ஆக்கிய உமர்கய்யாமின் தமி

மூக்கம் முழுக்க முழுக்கத் தமிழ்ப் பண்பாட்டை யொட்டியதாகும். 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என காந்தியப் பாதையைக் கவிதையாக்கினர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம். அழகின் சிரிப்பை'க் காட்டும் வாணிதாசன், 'இராவண காவியம்' படைத்த புலவர் குழந்தை, மாங்கனி, பெரும்பயணம் படைத்த கண்ணதாசன், இளவேனில் சோமுவும், பெரியசாமித்தூரனும் தமிழ்க்குமரி அண்ணாமலையும், நீ சிரித்தால் உலகநாதனும் 'ஒன்று' அப்துல்ரகுமானும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவும் குறிப்பிடத் தகுந்தவர்களாவர்கள்.

## 5-4 நாடகங்கள் (Dramas)

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சுந்தரம்பிள்ளை அவர்கள் மேலை நாட்டு மரபையொட்டி மனோன்மணீயத்தைக் கவிதை நடையில் ஆக்கித்தந்தார். ஆனால், இலக்கியத்திறனாய்வாளர்கள் இத்தகைய நாடகங்கள் படிப்பதற்கே யன்றி நடிப்பதற்கல்ல என வாதிடுகின்றனர். அண்மையில் மறைந்த நாடகத்தந்தை என அழைக்கப்படும் பம்மல் சம்பந்த முதலியார் சேக்சுபியரின் பல நாடகங்களைத் தமிழாக்கம் செய்து தமிழகத்தில் உலவவிட்டார். அவரே இன்பியல், துன்பியல் நாடகங்களும் எழுதியுள்ளார். அவருடைய 'மனோகரா' நாடகம் அறிஞர் பெருமக்களாலும் பொதுமக்களாலும் பாராட்டப்பட்டதாகும். நாடு மாற்றாரிடம் அடிமைப்பட்டுக்கிடந்த நேரத்தில் 'கதரின் வெற்றி' 'தேசியக்கொடி' போன்ற நாடகங்கள் மக்களிடையே பெருமளவு தேசிய உணர்வை ஏற்படுத்தின. நவாப் இராசமாணிக்கத்தின் புராண நாடகங்களுக்கும் மக்களிடையே மிகுந்த செல்வாக்குண்டு. டி. கே. எஸ். சகோதரர்கள் நடிக்கும் 'இராசராசசோழன்' அன்றைய சோழநாட்டையே நம் கண்முன் நிறுத்துவது போன்றுள்ளது. பி. எஸ். இராமையாவின் மல்லியம் மங்களம், தேரோட்டி மகன், போலீஸ்காரன் மகள், முதலிய நாடகங்கள் குறிப்பிடத் தகுந்தவை. பின்னர், சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திச் சாதிமத பொருளாதார ஏற்றத்தாழ்விலாச் சமுதாயத்தை உருவாக்க எண்ணிய அறிஞர் அண்ணாவின் சந்திரோதயம், வண்டிக்காரன் மகன் நாடக உலகிலே குறிப்பிடத்தகுந்தவைகளாகும். அறிஞர் அண்ணாவின் நடையையும் கொள்கையும் பின்பற்றி எழுச்சிமிக்க வசனங்களையும் கருத்தாழமிகுந்த உரையாடல்களையும் புரட்சிக் கருத்துக்களையும் தென்றலின் குளிமையையும் கலைஞர் மு. கருணாநிதியின் 'மணிமகுடம்' 'காகிதப்பூ' போன்றவற்றில் காண்கிறோம். இன்றைய நாடக உலகிலே சமூக சீர்திருத்த நாடகங்களைக் காண்கிறோம். ஆயிரமாவது முறையாக நடத்தப்பெறும் சோவின்

'முகம்மது பின் துக்ளக்' நாடகம் நகைச்சுவை மூலம் அரசியலைக் கண்டிக்கும் வரலாற்றுப் பின்னணி கொண்ட சமூக சீர்திருத்த நாடகமாகும். இன்றை நாளில் மேலைநாட்டுப் பாணியில் நாடகத்துறை ஓரளவு முன்னேறியுள்ளது எனின் மிகையாகாது. தமிழ் வளர்ச்சிக்கு நாடகத் துறையும் முக்கிய காரணமெனின் மிகையாகாது.

## 5-4-1 வானொலி இலக்கியம்

வானொலி இலக்கியம் இன்று பட்டிதொட்டி யெல்லாம் பரவியிருக்கின்றது. வானொலி மூலம் பேச்சுக்கள், கருத்தரங்குகள், உலகையறியும் செய்திகள், மனமகிழ் திரைப்பட இசை முதலியவற்றைக் கேட்கின்றோம். இன்றைய இலக்கிய வளர்ச்சியில் வானொலி முக்கிய இடம் பெறுகிறது. பேராசிரியர் அ. ஞானசம்பந்தம், அ. மு. பரமசிவானந்தம் போன்றோர் வானொலிக்கென்றே நாடகங்கள் எழுதி இத்துறையை வளர்க்கின்றனர். வளர்ந்துவரும் இலக்கிய உலகில் வானொலி இலக்கியத்திற்கும் முக்கிய பங்குண்டு.

## 5-5. சிறுகதைகள் (Short Stories)

முதன் முதலில் சிறுகதை படைக்கத் தொடங்கியவர் வ. வே. சு. அய்யர் ஆவர். சிறுகதை எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர் புதுமைப்பித்தன். சிறுகதை எழுதுவதில் அறிஞர் அண்ணாவும், மேடையில் சிறுகதை கூறுவதில் இராசாசியும் வல்லவர்கள். பி. எஸ். இராமையாவின் பூவும் பொன்னும், புதுமைக்கோயில், தி. சானகிராமனின் கொட்டுமேளம், விந்தனின் சிறுகதைகள், அகிலன், வேங்கட ராமன் கிருஷ்ணன்நம்பி போன்றவர்களுடைய சிந்தனை வளமுள்ள சிறுகதைகளும் குறிப்பிடத்தக்கவையாகும். புதுமைப்பித்தனுக்குப் பிறகு செயகாந்தன் சிறுகதை உலகில் சிறு மாற்றத்தை ஏற்படுத்தினர். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை மக்களைக் கொண்டு சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பல சிறுகதைகள் எழுதியுள்ளார். நம்முடைய சிறுகதைகள் இந்திய மொழியிலும் மேலைநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்ப்பாகிப் புகழ்மணம் வீசிக் கொண்டிருக்கிறது என்று எண்ணும்பொழுது, இலக்கிய உலகில் சிறுகதை நல்ல வளர்ச்சிபெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## 5-6. பத்திரிகை இலக்கியம் (Journals)

பத்திரிகை இலக்கியம் தற்பொழுது நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. ஆரம்பத்தில் கிறித்தவ மிசன்கள்தான் பத்திரிகைத் துறையைத்

தோற்றுவித்தன. தற்பொழுது நூற்றுக்கு மேற்பட்ட வார, திங்கள், நாளிதழ்கள் வந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகை உலகில் இலக்கியத்தோடு அரசியலும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தவண்ணமிருக்கின்றது. தமிழ்த்தென்றல் திரு. வி. க., திராவிடத்தந்தை பெரியார் ஈ. வெ. ரா. போன்றோரின் நுழைவு பத்திரிகைத் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. கலைக்கதிர், மஞ்சரி, செந்தமிழ், கலைமகள், செந்தமிழ்ச்செல்வி, விடுதலை, ஆனந்தவிகடன், குமுதம், தமிழ்க்கடல், தமிழ்ப்பொழில், கணையாழி, குயில், தமிழுணங்கு, நடை, தமிழ் தமிழ்நாடு, கண்ணன், திராவிடநாடு, முரசொலி, கல்வி, குறிஞ்சி போன்ற பத்திரிகைகளில் அறிவியல் கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள் வெளியாகின்றன. முழுக்க முழுக்க அறிவியல் பத்திரிகையாகத் திகழ்வது கலைக்கதிர் ஒன்றுதான். பல விடயங்களையும் தாங்கிக் கதம்ப மலர் போன்று விளங்குவது மஞ்சரி. பன்மொழிக் கட்டுரைகளையும் கதைகளையும் தாங்கிக் கதம்ப ஏடாக இம் மாத இதழ் திகழ்கிறது. பத்திரிகைகளில் விஞ்ஞானத் துறைக்கும் இலக்கியத் திறனாய்வுக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும். இன்றைய தமிழ்ப் பத்திரிகைகள் பெரும்பாலும் பாலுணர்ச்சியைத் தூண்டுவதாகவே உள்ளன. சில பத்திரிகைகள் குறிப்பாகச் செந்தமிழ், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, தென்மொழி, நடை போன்ற இதழ்கள் முழுக்க முழுக்க இலக்கியத் திறனாய்வுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. அக்காலத் தமிழ் நடைக்கும் இன்றைய பத்திரிகை நடைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை உண்டு. இக்காலப் பத்திரிகை வளர்ச்சி தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி எனின் மிகையாகாது.

## 5·7 குழந்தை இலக்கியம் (Children's literature)

மேலைநாடு போன்று நம் நாட்டில் குழந்தை இலக்கியம் வளரவில்லை என்றுதான் கூறவேண்டும். அழ. வள்ளியப்பா, கவிமணி, மயிலை சிவமுத்து போன்றோர்தாம் இத்துறையில் ஈடுபட்டுச் சிறுவர்களுக்கேற்ற இலக்கியங்கள் படைத்துவருகின்றனர். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் ஆர்தர் மீயால் தொகுக்கப்பட்ட பாலர் கலைக் களஞ்சியத்தைத் தயாரித்துவருகின்றனர். இந்திய மொழியில் தமிழில் தான் முதன்முதலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. எனினும் குழந்தை இலக்கிய வளர்ச்சி மனநிறைவை அளிக்கவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

## 5-8 மொழிபெயர்ப்பு (Translation)

பாரதி அன்று கண்ட கனவை இன்றுதான் ஓரளவு நிறைவேற்றி வருகிறோம். இத்துறையிலும் தமிழ்ப் பெருமக்கள் மிகுந்த ஈடுபாடு கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும். தமிழ் மொழியின் சிறந்த பகுதிகளை ஆங்கிலத்தில் ஆக்கித்தந்த வ. வே. சு. அய்யர், கிருட்டிண சாமி, சீனிவாசராகவன், கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பணி குறிப்பிடத் தக்கதாகும். 'சுவர்க்க நீக்கம்' குறிப்பிடத்தக்கதொன்றாகும். திரிகூடசுந்தரனாரும் பல ஆங்கில நூல்களைத் தமிழில் தந்துள்ளார். இன்றும் பல வங்க, மராத்திக் கதைகளைத் தமிழில் காண்கிறோம். சைவ சித்தாந்தக் கழகத்தாரும், பாரி நிலையத்தாரும் மேலை நாட்டு நாவல்கள் பலவற்றைத் தமிழில் ஆக்கித்தந்துள்ளனர். மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ் வெளியீட்டுக் கழகம் நாற்பதுக்கு மேற்பட்ட கலை, அறிவியல்சம்பந்தப்பட்ட கல்லூரிப் பாடநூல்களைத் தமிழில்ஆக்கி வெளியிட்டுள்ளது. எனினும் இத்துறை முன்னேறவில்லையென்றுதான் கூறவேண்டும். வடநாட்டுப் பல்கலைக் கழகங்கள் போன்று மொழி பெயர்ப்புத் துறையும் தனியாக இயங்க வேண்டும். பலர் அதில் பயிற்சி பெற்றுத் தமிழை உலகமெல்லாம் பரப்ப வேண்டும்.

## 5-9 திறனாய்வு (Criticism)

திறனாய்வு இன்றைய இலக்கியத்தில் வளரும் துறைகளில் ஒன்றெனக்கொள்ளலாம். தமிழிலக்கியத்திற்குத் திறனாய்வு ஒன்றும்புதிதன்று. என்றாலும் மேலைநாட்டைப் போன்று வளரவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். கவிதைகளைப் பற்றி வ வே. சு. ஐயரும், கம்பன் கவிதைகளைப் பற்றி டி. கே. சி. அவர்களும், தமிழிலக்கியப் பாடல்கள் குறித்துச் சீனிவாசராகவன் மற்றும் சிகாகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் இராமானுசம் ஆகியோரும் திறனாய்வு செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் 'அன்பு முடி', அ. ச. ஞானசம்பந்தத்தின் 'இலக்கியக் கலை' இவண்கண் குறிப்பிடத்தக்க நூல்களாகும். இலக்கியத்தில் முதுகலை பெற்ற மாணவர்கள் பலர் இத்துறையில் ஈடுபட்டு அரியதொரு பணியாற்றிவருகின்றனர். மற்ற நாட்டினரைப் போன்று நாமும் விருப்புவெறுப்பின்றித் திறனாய்வு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தரமிகுந்த நூல்கள் வெளிவர வாய்ப்பு ஏற்படும். இலக்கிய வளர்ச்சியில் அந்நூற்கள் தனியிடம்பெறும். இத்துறையும் மேலும் முன்னேற வேண்டும்.

## 5-10 பேச்சு (Oratory)

இலக்கிய வளர்ச்சியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்ற பேச்சுக் கலை இந்நூற்றாண்டில் மிக்க வளர்ச்சியடைந்துள்ளது எனத் துணிவாகக் கூறலாம் சமயத்தைப் பொறுத்தமட்டில், சொற்பொழிவானது காலட்சேபமாகக் கருதப்படுகின்றது. அரசியல் எழுச்சி காரணமாக, தமிழக மேடைகளில் நல்ல தமிழைக் கேட்கிறோம். திரு. வி. க, சத்திய மூர்த்தி, மறைமலையடிகள், சோமசுந்தரபாரதியார், டாக்டர் அ. சிதம்பரநாதச்செட்டியார் போன்றோர் சிறந்த பேச்சாளர்களாக இருந்தனர். மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் பேச்சைக் கலையாகவே வளர்த்தார் பெரியார் ஈ. வெ ரா., சிலம்புச் செல்வர் ம. பொ. சி. போன்றோர் மற்றும் கலைஞர் கருணாநிதி, நெடுஞ்செழியன், கி. ஆ பெ. விசுவநாதம் ஆகியோர் பேச்சுக் கலையில் வல்லவர்களாக உள்ளனர். பேச்சுக்கலையின் வளர்ச்சியானது உரைநடை, புதினம், நாடக வளர்ச்சிகளின் பகுதியாகக் கருதப்படுவதால் இலக்கிய உலகில் பேச்சுக் கலையும் முக்கிய இடம் வகிக்கின்றது.

## 5-11 வாழ்க்கை வரலாறு (Autobiography)

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் வரலாற்றில் இலக்கிய உலகில் அவர் கொண்டிருந்த தொடர்பினைக் காண்கிறோம். திரு வி.க. அவர்களது வாழ்க்கை வரலாற்றில் தமிழ் அறிஞர்களின் தொடர்பினை அழகாக எடுத்தியம்பியுள்ளார். டாக்டர் இராசனின் 'நினைவு அலைகளில்' தன்னுடைய அரசியல் தொடர்பைத் தெளிவாக விளக்கியுள்ளார். மற்றும் மகாகவி பாரதி (வ. ரா.) பண்டிதமணி (சோம. லெ.) வ. உ. சி. (ம. பொ. சி.) மறைமலையடிகள் வரலாறு (திருநாவுக்கரசு) விசுவநாதம் (சம்பந்தன்) புதுமைப்பித்தன் வரலாறு (இரகுநாதன்) இசுலாமிய திலகங்கள் (அப்துற்றஹீம்) போன்றவைகள் இத்துறையில் மேலும் குறிப்பிடத்தக்கவைகளாகும். நாட்டுக்கு உழைத்த தியாகிகள், மக்களுக்காக மடிந்த மாமேதைகள் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டு செய்த அறிஞர்கள், அறிவியலில் புதியன கண்டுபிடித்த விஞ்ஞான மேதைகள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் வெளிவரவேண்டும். இத்துறை மேலும் விரிவடைய வேண்டும்.

## 5-12 சுற்றுலா இலக்கியங்கள் (Travelogue Literature)

தமிழ்மொழியில் சுற்றுலா இலக்கியம் தோன்றியது இந்நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தொன்றாகும். உலகம் சுற்றிய தமிழன் ஏ. கே. செட்டியார் அவர்கள் தமது

அனுபவங்களை நூலாகத் தொகுத்துக் கொடுத்துள்ளார். அ. மு. பரம சிவத்தின் 'தமிழன் கண்ட மலேயா', இராமசுவாமி நாயுடுவின் 'நான் கண்ட சப்பான்', சி. சுப்பிரமணியம் அவர்களின் 'நான் சென்ற சில நாடுகள்', சோம. லெ.வின் அமெரிக்காவைப்பார், ஆசுதிரேலியாவில் ஒரு மாதம் முதலியன இத்துறையில் குறிப்பிடத்தக்க நூல்களாகும் அண்மையில் வெளியான மணியனின் ''இதயம் பேசுகிறது'' இத்துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்ருகும். இத்துறை இன்னும் வளர்ந்து எல்லா நாடுகளைப் பற்றியும் அனைத்துநாட்டு இலக்கியங்களைப் பற்றியும் அறியும் வாய்ப்புப் பெருகவேண்டும்.

தற்கால இலக்கிய வளர்ச்சியில் தமிழ்ப்பேராசிரியப் பெருமக்களின் பணியும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் பணியும் தமிழ் வெளியீட்டுக் கழகத்தாரின் பணியும் இலக்கிய வளர்ச்சிக்குப்பெருந்துணை புரிகின்றது. மேலும் கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் எமனே, ஆக்சபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் பர்ரோ, மற்றும் கமில் சுவலபில், ஆன்ட்ரனேவ் ஆகியோர் செய்த தமிழ் மொழி வளர்ச்சிக்கான பணிகள் தமிழர்கள் பெருமையடைய வேண்டிய நல்லதொரு பணியாகும். இம்மேலைநாட்டு அறிஞர் பெருமக்களின் பணி பாராட்டத்தக்கதாகும். இன்றைய இலக்கியம் எல்லாத்துறைகளிலும் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கின்றது என்பதில் பெருமிதம் கொண்டு, மேலும் அவற்றைப் பல்வழிகளில் முன்னேற்ற ஆவன செய்ய வேண்டும்.

# வள்ளுவர் எம் அமைச்சர்

கவிஞர் தமிழன்பன், தமிழாசிரியர், ஈரோடு.

கூடல் வளர்ந்ததமிழ்க் கோமகளே! நான்தமிழ்ப்பாப்
பாட அருள்செய் பரிந்து.

சொக்கி நகரார் சுவைத்தமிழ்ப் பாமலரில்
சொக்கி, நகரார்- சுரும்பாவார்- இந்நகரில்
முத்து மதுரையில் மூத்ததமிழ் வளர்க்கின்ற—
-சித்திரப் பூக்களிலே சிறந்த குறிஞ்சிப் பூ
ஒத்தவரை — கழகத்தின் ஒப்பில்லாத் தலைவரைநான்
அத்தர் மணத்தொலி அருந்தமிழால் வணங்குகிறேன்!
காவடிகள் விரும்பாமல் காதல் தருந்தமிழ்க்
கா,வடி,கள் விரும்புவர் — கழகப் பழனியப்பர்
அவருக்கும்.... அவரோடு துணைநிற்கும் அனைவர்க்கும்
அவைப்பந்தல் அமைந்தவர்க்கும் அன்பான வணக்கங்கள்!
பால்குடிக்கும் பழக்கத்தை இன்னும் விடாமல்முப்
பால்குடிக்கும் பழுத்த இளைஞரிவர் பாருங்கள்—
தள்ளாது வயதிவர்க்குத் தமிழ்த்தொண்டு புறக்கணித்துத்
தள்ளாத வயதிவர்க்கு....நரைநுரைத் தலைமுடியர்
உள்ளசா மிகளிலே உயர்ந்ததிரு பெற்றதமிழ்
வெள்ளைச்சா மிநாடர்க்கு — மிகவணக்கம் செய்திடுவேன்!
அண்ணன் முடியரசர் அவர்களுக்கும்....அருந்தமிழ்ப்
பண்ணுடிப் பாடவல்ல பாவலருக்கும் என்வணக்கம்....
மீனாட்சி நகரினிலே வேந்தனென விருதளித்து
நாளுட்சி செய்வதற்கு நல்லமைச்சாய் வள்ளுவனைத்
தேர்ந்தெடுத்துத் தந்துள்ளீர்! நன்றி தெரிவிப்பேன்!
சீர்த்ததிரு வள்ளுவனைச் செந்தமிழ் வல்லவனை
ஆர்அமைச்சாய்ப் பெற்றூர்கள் அடியேனைத் தவிர.....
கவிழாமல் என்னுட்சி கட்டாயம் அழிவுநெருங்
-க,விழாமல் காப்பாற்றி வந்திடுவான்! நாட்டினிலே
தேதித்தாள் போலவே தினங்கிழிந்து போகின்ற
வேதனை அமைச்சர் விவரங்கள் தெரியாதா?
உதிர்க்கச் சிலரை — உதிர்த்துவிட்ட உடனேடி.
எதிர்க்கச் சினக்கின்ற சிலரை அமைச்சர்கள்
எனநாளும் பார்க்கின்றோம்! என்னமைச்சன் வள்ளுவனே

மனமொத்து மன்னவனும் நான்மகிழ விளங்குகின்றான்!
கூரிய கொழுமுனைகள் குத்திக் கிழித்தாலும்
வாரிக் கதிர்மணிகள் வழங்காவா வயல்கள்?
தன்னரம்பைச் சுண்டித் துயரினைத் தந்தாலும்
இன்னிசை ஈயாதா நரம்பரங்க வீணை!
எழுத்தாணி கிறியே இன்னலைத் தந்தாலும்
பழக்குலைக் காவியத்தைப் பனையோலை நல்காதா?
கற்பாறை உளிமுனையில் கடுந்துன்பம் கண்டாலும்
சிற்ப மலராகி விழிவேட்கை தீர்க்காதா?
வருந்தேன்! துயரங்கள் வந்தாலும் ஏற்பேன்
வருந்தேன் எனச்சொல்ல வல்லவனே நல்லமைச்சன்!
மெய்ம்முயற்சி மிகுதுன்பம் தந்தாலும் மிரளாமல்
மெய்ம்முயற்சி செய்திடுவான் இன்ப வினைபுரிவான்!
எழுசிரான் வள்ளுவனே எனக்கிந்த வகையாகப்
பழுத்ததமிழ் அறிவமைச்சாய் அமைந்துள்ளான்—பதமாக!
கொம்புவிட்டுக் 'கொம்புக்குத்' தாவும் குணமுடைய
வம்பரசு வாதியல்ல என்னமைச்சன்! நானும்
குடத்திற்கும் கூசாவிற் கும்பின், கொடுக்கின்ற
அடகாக எனைக்கேட்கும் அச்சாரக் காசுக்கும்
தேர்ந்தெடுத் தனுப்பவில்லை! ஆட்சியெனுந் தேரேறி
ஓர்நாளில் அவனும் உளம்மாறிப் போனதில்லை
படைபலமும் பிறவளமும் படைத்திருந்த போதினும்
தொடைநடுங்கிள் அரசாட்சி தொடர்ந்து நடைபெறுமா?
கருப்புக் கொடியென்பார் கண்டனக் கூட்டமென்பார்
வரும்புரட்சி எனப்புரட்டு மொழிபகர்வார் மாற்றார்கள்....
எறும்பூரக் கல்தேயும்! இரும்புமா தேயும்?
சிறுத்தையா சிக்கும் சிலந்தி வலையிலே!
பேரறிஞர் பிறர்செய்யும் இடர்கண்டு தன்னெஞ்சு
வேரறுந்து வீழ்வதுண்டா! வீழ்வதுண்டு தடைமலைகள்!
மனமுடையான் ஆகிப்பல மணிச்செயல்கள் செய்தற்கு
மனமுடையா னும்என் அமைச்சனுயர் வள்ளுவன்!
குடிமக்கள் குறிப்பறிவான்! என்னாட்சிக் கதனால்
வெடி மக்கள் வைப்பதற்கு விரும்பார்கள்! மக்கள்
வெறுப்பதைத் துரத்துவதும் விரும்புவதைத் தூரத்துவதும்
பொறுப்பாகக் கொண்டுள்ள பொல்லாத மந்திரியை
நாட்டுக் குழைத்தகதை போதுமையா நாமுமை

வீட்டுக் கனுப்புகிறேம் என்றே விரட்டிடுவார்!
வெற்றிலைக் காம்பைப்போல் கிள்ளியே வீசிடுவார்
நெற்றி வியர்வையைப்போல் நிலத்தில் வழித்தெறிவார்!
நறுக்கி எறிந்தாலும் நகம்வளரும் எங்கேனும்
விரல்வளர வாய்ப்புண்டா வெட்டுண்ட பிற்பாடு!
வேர்மானங் காக்கும் விதத்தினிலே சட்டமன்றில்
தீர்மானம் நிறைவேற்றத் தெரிந்தவனென் அமைச்சன்!
குடிகாக்க வேண்டுமெனும் குறியுடையான்! போதைக்
குடிகாக்கக் கடைதிறப்புக் கொண்டாட மாட்டான்!
நியாயநூல் கற்கும் நிலையறிவான்! அதனலங்
நியாயநூல் கற்றிருப்பான்! அந்நியா யநூலல!
ஆள்வினை அவசியம் என்றறிவான் அல்லாமல்
ஆள், வினையாய் மாறி அனர்த்தங்கள் செயமாட்டான்!
புண்ணுற்று மற்றவர்கள் புலம்பிடவே செய்தவரின்
கண்ணீரில் படகோட்டிக் கைப்பற்றி வருகின்ற
சில்லறைக் காசவரைச் சில்லறையாக் கிடக்கும்
கல்லறைகள் என்றவரை உலகிற்குக் காட்டிவிடும்!
நெருப்பையா காகிதப் பெட்டிக்குள் நிரப்புவது?
வருமாபா துகாப்பு வழிகெட்டு வரும்பொருளால்!
துட்டுவரும் துட்டுவரும் என்று துரைத் தனஞ்செய்தால்
திட்டுவரும்! குட்டுடைந்து போகும்! குனிவுவரும்!
கெட்டுவரும் நாளுக்குக் கிடைத்துவிடும் அடையாளம்!
இழிவினை உண்டாக்கும் இழிவினைகள் செயமாட்டான்!
தொழிலல்ல தொண்டரென்று அமைச்சான வள்ளுவன்!
ஏட்டு வரிகளை இரண்டோடு முடித்துள்ளான்.
நாட்டு வரிபலவா போட்டிடுவான்? நலிவுசெய்வான்!
கடவுளுக்கும் பத்துப்பா கயமைக்கும் பத்துப்பா
வடித்தவனு சமதர்ம வழியறியான்! கடைப்பிடியான்!
அதிகாரஞ் செய்திட அறிந்துள்ள என்அமைச்சன்
அதி,காரம் எனஎவரும் அலறுகின்ற படிசெய்யான்!
மனமாசைப் போக்காமல் மனமாசைக் குட்பட்டுத்
தினம்பச்சைத் தாளின் அறுவடையே சிந்தித்துக்
கள்ளத் தனத்தாலே கையூட்டு வாங்கிமிகக்
கள்ளத் தனஞ்சேர்ப்பார்! கனத்தபனிக் கட்டி
அரசாங்க நிதி! அதுவோ அமைச்சர்கள் கையினிலே
கரைந்து கரைந்திறுதி யிலேகாணு மற்போகும்!

மையூட்டு கண்ணூர்பால் மனமிழந்த அமைச்சரும்
கையூட்டுக் காசின்பால் கருத்தழிந்த அமைச்சரும்
கட்டுச்சோற் றுக்குள்ளே கட்டிவைத்த எலிகள்தாம்!
கட்டவிழ்ந்த போதுதான் கதைவெளிச்சம் ஆகும்!
சுமந்துபெற் றவட்கே சுடுபசி என்றாலும்
எமதமைச்சன் பழிவினைகள் என்றும் சுமந்திடான்.
பொருள்செய்ய வேண்டுமெனல் புரிந்துள்ளான் - அதனால்
பொருள்தப்பாய்ச் செய்வதனைப் 'புறம்போக்கு' எனவெறுத்தான்
பாத்திரமே பாலைக் குடிக்குமா? பட்டிமைகள்
நேத்திரத்துக் கருமணியைக் கொள்ளையிட நினைக்குமா?
காத்தற்கு வந்தவனே கருவூலம் தனைத்தீர்த்துச்
சாத்துதற்கு விரும்புவது சரியா? முறைதானா?
அஞ்சுபா வஞ்செய்தல் அமைச்சரா னவர்சிலர்
தஞ்சுபா வமாக இருப்பதுண்டு! சண்டாளர்
நாற்காலி இடம்பெற்றே நகராமல் வீற்றிருப்பார்.
நாற்காலி களென்று நாமவரைக் கண்டிப்போம்!
வினைத்தூய்மை மிகவுடையான் என்அமைச்சன்! ஏனென்றால்
முனைத்தூய்மை இல்லாத கத்தியால் முழுப்பழமும்
நஞ்சாகும். என்பதெலாம் என்னமைச்சன் நன்கறிவான்!
வஞ்சகமே இல்லாத நெஞ்சத்தான். வகையாய்ந்தே
எச்ச வினையாய் எடுத்தவினை நிறுத்தாமல்
மெச்சும் படிமுற்று வினையாக்கி முடித்துத்தன்
பெயரெச்சம் ஆகிப் பிறங்கவே செய்திடுவான்!
நயப்பண்புத் தொகையாகி, நாளும்முக் காலத்தை
வினைத்தொகைபோல் மிகத்தெளிவாய் அறிந்து செயல்படுவான்!
நனைபன்னீர்ப் பாட்டிற்கு நல்லகருப் பொருளாவான்.
ஒருப்பட்டு ழியங்கள் ஓயாமல் புரிந்திடுவான்
வெறுப்பட்டு ழியங்கள் விளைக்க அறியாதான்!
தாயகத் திற்கெனவே தனைத்தருவான்- தவறியும்
தாயகத் திற்கெனவே தனைதர மாட்டான்!
அதிகாரப் பதவிக்கே வலம்வர அறியான்
அதிகாரப் பதவி,கே வலமென்பான் அறிவாளன்!
மந்திரித்து மந்திரித்து நன்மைசெய்யா மல்தின
முந்திரித்துத் திரித்து மொழி,வித்தை செய்யாதான்!
அரசா சனத்தையே அசையாமல் காப்பதற்குச்
சிரசா சனஞ்செய்து வாராமல் சிறப்பாக

நாட்டவரை நாட்டமுடன் நாடிநலம் நாட்டிடவே
போட்டுள்ள திட்டப் படிசெயல்கள் புரிந்திடுவான்!
குடிவெறுத்துத் திட்டக் குறைசெய்வோன் மந்திரியா?
முடிவு குறைந்துள்ள முழுமந் திரியவனே!
பிறதேச ஆசை பிழையானால் தன்னுடைய
பிரதேச ஆசையுமா பிழையென்று சொல்லுவது?
பிறர்மனையை நோக்குவது பிழைதான் மணந்துள்ள
உறவு மனையாளை நோக்குவதும் ஒருபிழையா?
வெண்டைக்காய் விளக்கெண்ணெய்ப் பேச்சுக்கள் பேசாமல்
துண்டிரண்டு வெட்டொன்று—என்னமைச்சன் துணிவிதுதான்!
மந்திரியாய் இருக்கையிலே மாற்றார் தமைக்கூடத்
தந்திரமாய்த் தம்பக்கம் வலைவீசி இழுத்திட்டான்!
கூட்டநீ கட்சிகளை முயல்க—பகையினை
ஓட்டநீ உருவாக்குக் கூட்டணி என்றுரைத்தான்
ஈரடியான்! என்னிடத்தில் இதையுணர்ந்தேன்.. இதைவிட
வேரடியில் பகையறுக்க வேறென்ன செயவேண்டும்!
கேட்டார்ப் பிரிக்கும் தகையவாய்க் கேளாரும்
ஓட்டம் எடுக்க உரைப்பதுவா சொல்லாற்றல்?
வெட்டுண்ணத் தலைநீட்டும் வெள்ளாடு போல்மறுப்புத்
தட்டித் தலையடக்கும் படிசொல்வ தாபேச்சு?
சொல்லின் செல்வரென விளங்குகின்ற சொல்லாற்றல்
எல்லார்க்கும் கிடைக்கிறதா எளிதில்? சிலர்ஏதும்
சொல்லின் இருப்பவர் சொல்லாமல் எழுந்துடனே
செல்வர்....இவரும் ஒருசொல்லின் செல்வரா?
வெறுங்கையில் முழம்போடும் வேடிக்கை மனிதர்கள்
அறிவுநூல் கல்லாமல் மேதை அவதாரம்
எடுத்திருப்ப தாக இயம்பிடுவார்....அவர்க்கென்ன
அடுத்திருந்தே குழிபறிக்கும் ஆதாய நோக்கர்கள்
மதிநுட்பம் நூலோடு கொண்டுள்ளான் வள்ளுவன்
அதுநுட்பச் செயலெல்லாம் ஆய்ந்தாய்ந்து முடிக்கின்றான்!
பொன்னுக்கு வாயன்சொல் பொருள்பயக்கும் நாட்டினிலே
புன்னுக்கு வாயன்சொல் புண்ணாக்கும்! பொருள்போக்கும்
வாக்காளத் தேர்ந்தறிந்த வல்லவனே தேர்தல்நாள்
வாக்காள முடியும்! வரும்நாளை வகையாகச்
சொல்லேமாற் றமென்னும் சூத்திரத்தை அறிந்தவனே
நல்லமைச்சன் நாக்குத்தான் அரியணைக்கு வாசல்!

அவையறிந்து சொல்வதனை அவனறிந்து அவரேற்கும்
சுவையறிந்து சொல்லறிந்து சொல்லிடுவான் என்னமைச்சன்.
கள்ளிக்கா காவேரி நதிப்பாய்ச்சல்! எவரேனும்
கொள்ளைமணச் சந்தனத்தைக் கொட்டுவரா சாக்கடையில்!
பன்னீர்த் தெளிப்பா பிணத்திற்கு! பயன்கருத்தைச்
சொன்னால் அறிவாளர் அவையிலன்றோ சொலவேண்டும்?
விலவிலத்து நடுநடுங்கி வியர்த்துப் பயப்படுவான்
பலப்பலவாய் நூல்களைப் படித்திருந்தும் என்னபயன்?
ஊமைக்கா ஒலிபெருக்கி! செவிட்டுக்கா இசைவட்டம்?
ஆமைபோல் அடங்குபவன் கையினிலா கூர்வாள்?
வழுக்கைத் தலையனுக்கு வாரிவிடுஞ் சீப்பெதற்கு?
கொழுக்க அறிவுதரும் நூலெல்லாம் கூடியுள்ள
நல்லவை கண்டுடம்பு நாட்டியம் ஆடுகின்ற
புல்லியன் தக்கோர் பயனைத்தான் புரிந்திடுமா?
பிறங்கும் அறிவுநூல் கற்றறிந்த பேரறிஞன்!
சிறந்த கலைஞன் திறம்மிக்க நாவலன்
என்னமைச்சன் வள்ளுவன்வாய் இனிப்பு மடைதிறந்தால்
பொன்னான கருத்துக்கள் அணிவகுப்புப் புறப்படும்!
சந்தனச் சிந்தனைகள் சவ்வாது மொழித்தேரில்
சுந்தர உலாவரும்! சொக்கவைக்கும் சிக்கவைக்கும்!
இலைமுற்றிப் பழமாகு மாஇல்லை எறிகடலில்
அலைதிரண்டு முத்தாகுமா? பேச்சால் ஆகுமா
முன்னேற்றச் செயல்கள் முடங்கி வீணகிடந்தால்
முன்னேற்றங் கொண்ட வரும் பேச்சிலே மூழ்கினால்
அசைச்சொல்லைப் போல்பயன் அற்றுக் குறைபடுவர்
அசைத்தவரை நாட்டார் அகற்றிடுவர்! அதனால்
நிலைமொழியாய் இருக்கின்ற நாட்டார்பால் நெருங்கிப்
பலசெயல்கள் வருமொழியாய் வந்து படைத்திடுவான்
பனிபெய்து பயிர்விளை யாது! மழை வேண்டும்
கனியாகப் பயன்கிடைக்கக் காரியம்வித் தவேண்டும்நாம்!
நாட்டு நலனைக் கவனிக்க வொட்டாமல்
வீட்டுத் திறப்பு விழாக்கள்பின் பெட்டியின்
பூட்டுத் திறப்பு விழாக்கள் புரிவதற்கு
நாட்டவரே என்னமைச்சை நாடாதீர்! அதுபிழை!
வயிரத்தில் ஊசியினை வாங்கியபின் அதனைப்
பயன்படுத்தத் தெரியாமல் பழஞ்சாக்குத் தைக்காதீர்!

நாதக் குழல்கிடைத்தும் நாட்டவரே அடுப்பெடுக்க
ஊதுங் குழலாக்கி உபயோகம் கெடுக்கின்றீர்!
கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சென்றால், அவ்வமைச்சை
ஒருவினையும் செய்யாமல் குடிகளிலே ஒருசிலர்தாம்
தெருவினைகள் செய்யப் பயன்படுத்தல் சரிதானு!
நாட்டவரின் நன்மையினை நாடித் துடிப்பறிந்து
கேட்டை அகற்றுதற்குக் கிடைத்துள்ளான் என் அமைச்சன்!
வடிவெள்ளி நகையாதீர் இரண்டடியான், மாநிலத்து
விடிவெள்ளி என்றறி வீர்!

---

## மதிப்புரை

### "சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள்"

ஆசிரியர்: திரு. க. நாச்சிமுத்து எம். ஏ. விலை ரூ. 2-50 (பக்கங்கள் 148)

இந்நூலும் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் எம். ஏ. பட்டத்திற்காகச் செய்த ஆய்வின் பகுதியேயாகும்.

அறிந்தவற்றைக்கொண்டு அறியாதவற்றை அறிய முயற்சிப்பதே ஆய்வாகும். தமிழ் நாட்டில் ஊர்ப்பெயர்கள் ஏதாவது ஒரு காரணம் பற்றியே அமைந்திருக்கும். பல பெயர்கள் திரித்து வழங்கும். பின்னர் அத்திரிந்த பெயரின் அடிப்படையில் கதைகளும் புராணங்களும் தோன்றிப் பெருவழக்கிற்கு வந்துவிடும். இந்நிலையில் உண்மைப் பெயரைக் கண்டு சான்றுகளுடன் விளக்குவது கடினமான முயற்சியாகும். இம்முயற்சியில் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். ஆசிரியர் பல நூல்களை ஆராய்ந்ததுடன் அவ்வவ்வூர்களுக்குச் சென்று வரலாற்றுச் சான்றுகளை ஆய்ந்து இந்நூலை எழுதியிருப்பது பாராட்டிற்குரியதாகும்.

கி.பு.

# திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவுவிழா

மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில், மீனாட்சிசுந்தரர் திருக்கோவில் வடக்காடி வீதியிலுள்ள திருவள்ளுவர் கழக மன்றத்தில், மார்கழித் திங்கள் 29உ முதல் தைத்திங்கள் 5உ முடிய ஆறு நாட்கள் (13-1—70 முதல் 18—1—70 முடிய) திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

எல்லா நாட்களிலும் சங்கத்தலைவர் தமிழவேள் திரு பி.டி. இராசன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தனர். முதல் நாள் 13—1—70 அன்று மாலை 5 மணிக்கு முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. நன்றாக ஒப்பனை செய்யப்பெற்ற தேரில், திருவள்ளுவர் திருவுருவப்படம் வைக்கப்பெற்று ஊர்வலமாக, நான்கு மாசிவீதி வழியாகக் கொண்டுவரப்பெற்றது. இரவு 7 மணிக்குச் சொற்பொழிவு நிகழ்ச்சி தொடங்கியது. திரு. பொன். முத்தையன் ஓதுவார் இறைவணக்கம் பாடியபின், மீனாட்சி திருக்கோவில் இறைபணியாளர் திரு. S. திருமலையப்பன், பி. ஏ., பி. எல். அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். பின்னர்த் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் (திருச்சி), திரு. திருக்குறளார் வீ. முனிசாமி பி. ஏ., பி. எல். (விழுப்புரம்), டாக்டர் திரு. சி. இலக்குவனர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. ரா. வே. நாராயணன், எம் ஏ. அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

2-ஆம் நாள் (14—1—70) அன்று மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. திரு. S. சைலப்பஓதுவார் இறைவணக்கம் பாடியபின் திருவானைக்காத் திருக்கோவில் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல். அவர்கள் திருக்குறட் கொடியை ஏற்றுவித்து உரை நிகழ்த்தினர். விழாத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். கழகச் செயலாளர் பண்டித வித்துவான் திரு. ச. சாம்பசிவன் அவர்கள் அறிக்கை படித்தார். பாராளுமன்றத் தி. மு. க. கட்சித் தலைவர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், எம். ஏ., எம். பி. அவர்கள் தொடக்கப் பேருரையாற்றினர். வள்ளுவர் கழகத்திலிருந்து வெளியிட்ட சிறப்பு மலரையும், திரு. ச. சாம்பசிவன் எழுதிய 'வள்ளுவர் தெள்

ளுரை' என்ற நூலையும், கலையன்னை திருமதி. இராதாதியாகராசன் எம். ஏ. அவர்கள் வெளியிட்டுப் பேருரையாற்றினர். விழாத் தலைவர் முடிவுரைக்குப் பின், கழகச் செயலர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

3-ஆம் நாள் (15—1—70) அன்று மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. திரு. வ. ஈசுவரமூர்த்தி ஓதுவார் இறைவணக்கம் பாடியபின் விழாத் தலைவர் தமிழவேள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். 'திருக்குறளில் உவமை நயம்' என்பது பற்றிச் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி, பெருமைமிகு எம். எம். இசுமாயில் அவர்கள் அரியதொரு சொற்பெருக்காற்றினர். பின்னர்ச் சென்னை ஒற்றுத்துறை உயர் அதிகாரி உயர்திரு சு. மீ. டயசு I. P. S. அவர்கள் 'உலக மேதைகளுள் வள்ளுவர்' என்ற பொருள் பற்றிப் பேருரையாற்றினர். கழக ஆசிரியர் பண்டித திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

4-ஆம் நாள் (16—1—70) அன்று மாலை 6 மணிக்கு 'மகளிர் விழா'வாகக் கொண்டாடப்பெற்றது. செல்வியர் ஆனந்தலட்சுமி, கமலா ஆகியோர் இறைவணக்கம் பாடினர். விழாத் தலைவர் தமிழவேள் அவர்கள் வரவேற்புரை கூறியபின், 'வள்ளுவர் கண்ட பெண்கள்' என்ற தலைப்பில் சென்னை திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களும், 'வள்ளுவரும் மாதரும்' என்ற தலைப்பில் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் செல்வி சோ. பாகீரதி எம். ஏ. அவர்களும் 'வள்ளுவர் ஒரு மருத்துவர்' என்ற தலைப்பில் மதுரை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியை டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன் M. B. B. S., Ph.D. (LON.) அவர்களும் பேசினர். கழகத் துணைச் செயலர் புலவர் திரு. சு. இராமச்சந்திரன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

5-ஆம் நாள் (17—1—70) மாலை 6 மணிக்குப் 'பட்டிமன்றம்' நடந்தது. திரு, தி. வே. திருப்பதி இறைவணக்கம் பாடியபின், விழாத் தலைவர் தமிழவேள் அவர்கள் வரவேற்புரை கூறினர். பட்டிமன்றத்திற்குப் பேராசிரியர் உரைவேந்தர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை நடுவராக இருந்தார். பட்டிமன்றப் பொருள் "அறிந்துகொள்ளுதற்கு மிகவும் எளியது எது? வள்ளுவர் உடன்பாடாக உரைப்பதா? எதிர்மறையாக உரைப்பதா" என்பதாகும். 'உடன்பாடாக உரைப்பதே மிக எளிது' என்ற கட்சிக்குப் பேராசிரியர் திரு. நா. பாலுசாமி எம். ஏ. அவர்களும், 'எதிர்மறையாக உரைப்பதே மிக எளிது' என்ற கட்சிக்குப் பேராசிரியர் டாக்டர் திரு. சுப. அண்ணாமலை அவர்களும் தலைமை

தாங்கினர். உடன்பாட்டுக் கட்சியில் திரு கண. சிற்சபேசன் எம், ஏ. (மதுரை), திருமதி தி. சுந்தராம்பாள் எம். ஏ. (விருதை) ஆகியோரும், எதிர்மறைக் கட்சியில், திரு. சோ. சத்தியசிலன் எம். ஏ. (திருச்சி), செல்வி ரு. ந. சோதிபாய் எம். ஏ. (மதுரை) ஆகியோரும் சொற்போரிட்டனர். தலைவர் முடிவுரைக்குப்பின், மீனாட்சி திருக்கோவில் ஆட்சிக் குழுவுறுப்பினர் திரு. அ. சிதம்பர முதலியார் எம். எல். சி. அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

6-ஆம் நாள் (18—1—70) அன்று முற்பகல் 10 மணிக்குக் 'கவியரங்கம்' நிகழ்ந்தது. திரு. S, கனகசபை ஓதுவார் இறைவணக்கம் பாடினார். விழாத் தலைவர் வரவேற்புரை கூறியபின், திருக்குறள் திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள், தொடக்க உரையாற்றினர். கவிஞர் திரு. முடியரசன் அவர்கள் கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கினர். திருவாளர்கள் மு. முத்துவேங்கடாசலம் அவர்கள் (பள்ளத்தூர்), பண்டித அ. முத்துசாமிப் புலவர் அவர்கள் (மதுரை), கவிஞர் கதி. சுந்தரம் அவர்கள் (மதுரை), கவிஞர் தமிழன்பன் அவர்கள் (ஈரோடு), புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள் (தஞ்சை), கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம். அவர்கள் (மதுரை) ஆகியோர் முறையே "வள்ளுவர் எம் தெய்வம், எம் ஆசிரியர், எம் தோழர், எம் அமைச்சர், எம் தந்தை, எம் அன்னை" என்ற தலைப்பில் கவிதை பாடிச் சிறப்பித்தனர். கழகத் துணைச் செயலர் திரு. மு. இரத்தினசபாபதி, பி. ஏ., பி. டி. அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று பிற்பகல் 6 மணிக்கு நிறைவு விழாவும் பாராட்டு விழாவும் நடந்தன. செல்வியர் கே. மாலதி, எச். கல்யாணி ஆகியோர் இறைவணக்கம் பாடினர். விழாத் தலைவர் தமிழவேள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பெருமைமிகு என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் 'வள்ளுவரும் நீதியும்' என்ற பொருள் பற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தினர். உயர்பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரில் முதற்பரிசு பெற்றவர்களின் போட்டி நிகழ்ந்தது. வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு, இந்து அறநிலைய ஆணையர் உயர்திரு. K. S. நரசிம்மன், I. A. S. அவர்கள் பரிசுகள் வழங்கினர். பின்பு, கழக ஆசிரியர் பண்டித திரு. மீ. கந்தசாமிப் புலவர் அவர்களுக்கு விழாத் தலைவர் தமிழவேள் அவர்கள், பொன்னாடை போர்த்திக் 'குறள்வேந்தர்' என்னும் பட்டமளித்துப் பாராட்டினர். அன்னாருக்குக் கழகச் செயலர் வாழ்த்துப்பாப் படித்தளித்தார். மதுரை நகரத்திலுள்ள பிற சங்கங்களும், அன்பர்களும் மலர் மாலை அணி

வித்தனர். பின்னர், மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் வாழ்த்துரை வழங்கினர். விழாத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள், நிறைவுரையாற்றிக், கழகச்செயலர் பண்டிதவித்துவான் திரு. ச. சாம்பசிவன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர். இறுதியில் கழகப் புரவலரும், சங்கச் செயலருமான அறநெறியண்ணல் திரு இ. பழநியப்பனாரவர்கள் ஆறு நாட்களாக விழாச் சிறப்புற நிகழத் துணை புரிந்த அனைவர்க்கும் உரிய முறையில் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

## சங்கச் சிறப்பு உறுப்பினர்கள்:

12—2—70 அன்று, சங்கத்தலைவர் தமிழவேள் திரு. பி டி. இராசன் அவர்கள் தலைமையில் கூடிய செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் கீழ்க் கண்டவர்கள் சிறப்பு உறுப்பினர்களாக முழுமனதுடன் தேர்ந்தெடுக் கப்பெற்றுள்ளனர்:

1. முத்தமிழ்க் காவலர் திரு. இ. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி.
2. திருக்குறளார் திரு. வீ. முனிசாமி அவர்கள், பி. ஏ., பி. எல்., விழுப்புரம்.
3. திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள், எம். ஏ., பி. எல். திருச்சி.
4. பெருமைமிகு நீதிபதி திரு. N. கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள், சென்னை உயர்மன்ற நீதிபதி, சென்னை.
5. பெருமைமிகு நீதிபதி திரு. M. M. இசுமாயில் அவர்கள், சென்னை உயர்மன்ற நீதிபதி, சென்னை
6. உயர்திரு. சு. மீ. டயசு அவர்கள், M. A., I. P S., (D. I. G. of Police, C. I. D.) சென்னை
7. உரைவேந்தர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.
8. டாக்டர் உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.
9. திருக்குறள் திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள், விருதுநகர்.
10. திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், சென்னை.

11. கலையன்னை திருமதி. இராதாதியாகராசன் அவர்கள், எம். ஏ.
மதுரை.

12. திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள்,
பி. ஏ., பி. எல்.

13. திரு. க. அன்பழகன் அவர்கள், M. A., M. P., சென்னை.

## சங்கப் புலவர் தேர்வுகள்

தமிழ்ச் சங்கப் புலவர் தேர்வு, மதுரை, மார்த்தாண்டம் ஆகிய இரு இடங்களில் 16—3—70உ முதல் 21—3—70உ முடிய நடைபெற்றது. இளம்புலவர் நுழைவுத் தேர்வுகள், மதுரை, மார்த்தாண்டம், திருநெல்வேலி, மேட்டுப்பாளையம், திருச்செங்கோடு, மோகனூர், மணப்பாறை, திருப்பனந்தாள் ஆகிய எட்டு இடங்களில், 16—4—70உ முதல் 22—4—70உ முடிய நடைபெற்றன.

## வெற்றி தோல்விகள் மதிப்பிடும் முறைகள்

### புலவர், இளம்புலவர்:

1. ஒவ்வொரு பாடத்திலும், 100-க்கு, குறைந்தது 30 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

2. மூன்று பாடங்கள் சேர்ந்த பகுதி ஒவ்வொன்றிலும் 300-க்கு குறைந்தது 90 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

3. இரண்டு பகுதிகள் சேர்ந்து மொத்தத்தில் 600-க்கு, குறைந்தது 210 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

4. மூன்றும் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண் 210
இரண்டாம் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண் 300
முதல் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண் 360

### புலவர் தேர்வுப் பாடப் பகுதிகள்:

*பகுதி 1-க்குரிய பாடங்கள்:—*
1. இலக்கியம் 1
2. இலக்கியம் 2
3. கல்வெட்டு

*பகுதி 2-க்குரிய பாடங்கள்:—*
1. இலக்கணம் 1
2. இலக்கணம் 2
3. மொழி இலக்கிய வரலாறு

## இளம்புலவர் தேர்வுப் பாடப் பகுதிகள்

| | | |
|---|---|---|
| பகுதி 1 க்குரிய பாடங்கள்:— | 1. | இலக்கியம் 1 |
| | 2. | இலக்கியம் 2 |
| | 3. | தென்னிந்திய வரலாறு |
| பகுதி 2 க்குரிய பாடங்கள்:— | 1. | இலக்கணம் 1 |
| | 2. | இலக்கணம் 2 |
| | 3. | கட்டுரை |

## நுழைவுத் தேர்வு:

ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40 மதிப்பெண்கள் எடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| மூன்றும் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண்கள் | 120 |
| இரண்டாம் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண்கள் | 150 |
| முதல் வகுப்புக்குக் குறைந்த மதிப்பெண்கள் | 180 |



திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில், சென்னை உயர் மன்ற நீதிபதி பெருமை மிகு. எம். எம். இசுமாயில் அவர்கள் பேசிய போது எடுக்கப்பெற்றது. விழாத் தலைவர் தமிழவேள் அவர்களும், உயர்திரு. சு. மீ. டயசு அவர்களும் அருகில் அமர்ந்துள்ளனர்.